எனது ஊர்

# காரை நகர்

www.karaiNEWS.com

கனடாவில் இருந்து வெளியாகும் காரைநகர் செய்தி சஞ்சிகை. இலவசம். தொலைபேசி: 416 821 8390 இதழ் 23

J/KARAINAGAR HINDU COLLEGE

TO THINE OWN SELF BE TRUE

## உள்ளே...


☆ காரைநகர் நன்னீர் பிரச்சனை தொடர்பான காரை மக்களின் ஆய்வுக்கூட்டம்...(பக்கம் 4)

☆ காரை மத்தி ஸ்ரீ சிதம்பரேஸ்வரா சனசமூக நிலையமும் முன்பள்ளியும் இணைந்த கட்டிட திறப்பு விழா விபரம் ...(பக்கம் 13)

☆ ஜேர்மனி நாட்டில் காரைநகர் மக்கள் ஊர்ப்பணி ஆற்ற சங்கம் அமைத்து செயற்பட தொடங்கியுள்ளனர்...(பக்கம் 14)

☆ 'காரை ஒன்றியம் ஜேர்மனி ' உருவாக்கமும் சிந்தனையும் ... (பக்கம் 19)

☆ சிறுகதை: நல்ல நாள் திரு.முருகேசு ரவீந்திரன் (பக்கம் 22)

☆ 'எனது ஊர் காரைநகர் ' www.karainews.com ' சேவையாளர் கௌரவமும் சேவை நலன் பராட்டும் 2019... விபரம் (பக்கம் 25)























'எனது ஊர் காரைநகர்'
வெளியீடு பிரதான அனுசரணை:

**Dr.V.Vijayaratnam M.D Canada**






**‘எனது ஊர் காரைநகர்’ வெளியீடு பிரதான அனுசரணை:**

**Dr.V.Vijayaratnam M.D**

**Canada**

# கொஞ்சம் சிந்திப்போம்....!

கனடா காரைநகர் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கமானது கடந்த வருடம் 2018 இல் பாடசாலையின் பல்வேறுபட்ட தேவைகளை கருத்தில் கொண்டு 8 இலட்சம் ரூபாய்கள் வரையான நிதியினை அனுப்பியுள்ளதுடன் பாடசாலை நிர்வாக செயற்பாடுகளை தடையின்றி நடாத்துவதற்குரிய உத்வேகத்தையும் ஆர்வத்தினையும் அதிபர் மற்றும் பழைய மாணவர் சங்கத்தினருக்கு வழங்கி வந்துள்ளது. உதாரணமாக ஒன்றே ஒன்று போதும்... கொன்கிறீட்டினால் அமையப்பெற்றுள்ள அடுக்கு மாடி கட்டிடங்களில் தற்போதைய வெப்ப கால சூழ்நிலையில் மாணவர்களோ ஆசிரியர்களோ மின்விசிறியின்றி கல்வி கற்கவோ அன்றி கற்பிக்கவோ முடியாத சூழ்நிலையில் மின்கட்டணம் கடந்த காலங்களை காட்டிலும் இப்போது பலமடங்கு அதிகரித்துள்ளது. ஆனாலும் அரசினால் மின்பாவனைக்காக வழங்கப்படும் நிதியானது மொத்த தொகையின் சில விகிதங்களே அதே போன்று குடிநீர் மற்றும் இதர அத்தியாவசிய தேவைகளிற்கு அரசினால் ஒதுக்கப்பட்டுள்ள நிதி மிகமிக சொற்பமானதே.

இந்த நிலையில் கனடா காரை இந்து பழைய மாணவர் சங்கம் எடுத்துக்கொண்ட முயற்சியினால் மட்டுமே பாடசாலை நிர்வாகத்திற்கு உத்தரவாதத்துடன் கூடிய உதவிகளை செய்ய முடிகின்றது. காரை இந்துவில் அதிபர் உட்பட பல ஆசிரியர்கள் பற்றாக்குறை ஏற்படுகின்ற பட்சத்தில் அண்மித்த வெளியிட பட்டதாரி ஆசிரியர்கள் இதுபோன்ற அடிப்படை அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள முடியாத பாடசாலைகளிற்கு தங்களது விண்ணப்பங்களை ஒருபோதும் அனுப்பி வைக்க மாட்டார்கள் என்பதும் அடிப்படை அத்தியாவசிய தேவைகளை மேலதிகமாக வழங்க வேண்டி பொறுப்பும் கடமையும் கடப்பாடும் இன்றைய காலகட்டத்திற்கு ஏற்ப வழங்க வேண்டியது இப்பாடசாலையில் கல்வி கற்ற கனடா வாழ் காரை மக்கள் அனைவரது கட்டாய கடமையாக கருத்தில் கொண்டு 'எனது ஊர் காரைநகர்' ஆதரவு வழங்கி வருவதோடு அனுசரணையும் வழங்கி வருகின்றது.

காரைநகர் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் கனடாக் கிளையின் ஏற்பாட்டில் கடந்த நான்கு ஆண்டுகளில் நான்கு இசை நிகழ்ச்சிகள் நடைபெற்றிருந்தன. இவை அனைத்தும் இசை ரசிகர்களின் பலத்த வரவேற்பினைப் பெற்றிருந்தன என்பது மட்டுமல்லாது பெரு வெற்றி நிகழ்வுகளாக அமையப்பெற்று அவற்றின் ஊடாக காரை இந்துவின் வளர்ச்சிக்கு உதவுதல் என்கின்ற உயரிய இலக்கினையும் அடையமுடிந்தது. இந்நிகழ்வுகள் மூலமாத் திரட்டப்பட்டிருந்த நிதி கல்லூரியின் வளர்ச்சிப் பணிகளை சிறப்பாக நிறைவேற்றிவைக்க உதவியது.

'கலைமாமணி' திருமதி பூசணி கல்யாணராமன், யாழ்.பல்கலைக்கழக இசைத்துறை மூத்த விரிவுரையாளர் செல்வி பரமேஸ்வரி கணேசன், 'சுப்பர் சிங்கர், சாயி விக்னேஸ், 'சுப்பர் சிங்கர்' R.P. ஷ்ரவண் ஆகியோரினால் நிகழ்த்தப்பட்டிருந்த கர்நாடக இசை நிகழ்ச்சிகளின் வரிசையில் கர்நாடக இசை நிகழ்வினை வழங்கும்பொருட்டு பழைய மாணவர் சங்க கனடாக் கிளையின் அழைப்பிற்கிணங்க 'சுப்பர் சிங்கர்' சாய் சரண் வருகைதருகின்றார். உலகப்புகழ்பெற்ற விஜய் தொலைக்காட்சியின் 'சுப்பர் சிங்கர்' போட்டித் தொடர் 3இல் பங்குகொண்ட சாய் சரண் முதலாவது வெற்றியாளராக(Title Winner) தடம் பதித்துக்கொண்டவர். இன்று 19.05.2019 ஞாயிற்றுக்கிழமை கனடா கந்தசுவாமி கோயில் அரங்கில் நடைபெறவிருக்கும் சாய் சரணின் கர்நாடக இசைக் கச்சேரியானது கனடாவில் நடைபெறும் இவரது முதலாவது கர்நாடக இசை நிகழ்வாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

அரச உதவிகள் கிடைக்கப் பெறாத அவசியத் தேவைகளிற்கான நிதியினைப் பெற்றுக்கொள்வதில் காரைநகர் இந்துக் கல்லூரிச் சமூகம் எதிர்கொள்ளும் சவால்களிற்கு நிரந்தரத் தீர்வினை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்குடன் பழைய மாணவர் சங்கத்தின் கனடாக் கிளை முன்னெடுத்துவரும் நிரந்தர வைப்புத் திட்டத்திற்குத் தேவையான நிதியின் ஒரு பகுதியைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு சாய் சரணின் இசை நிகழ்வு ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. அங்கத்தவர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள், அனுசரணையாளர்கள் அனைவரும் இந்நிகழ்ச்சிக்கு என்றும்போல தமது ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்குவதன் ஊடாக இந்நிகழ்ச்சி அனைத்துவகையிலும் வெற்றிகரமானதாக அமையப்பெற்று குறிப்பிட்ட உயரிய இலக்கினை அடைவதற்கு உதவிடுமாறு பழைய மாணவர் சங்க கனடாக் கிளையின் நிர்வாகம் உரிமையோடு அறிவித்துள்ளது.

**இன்று நடைபெறும் நிகழ்விற்கு வருகை தந்துள்ள நீங்கள் இந்த முதல் பக்க செய்தியினை வாசித்திருப்பீர்கள் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு. நீங்கள் வெளியேறும் போது மேலும் 10 டொலர் அதிகமாக கொடுத்து செல்லுங்கள் அதுவே உங்கள் ஆதரவினை எமக்கும் எமது பாடசாலைக்கும் புத்துணர்ச்சி ஊட்டும்.**

'எனது ஊர் காரைநகர்' www.karainews.com


PLATINUM SPONSORS
குழந்தை வைத்திய நிபுணர்
Dr.V.Vijayaratnam M.D
CLEARREX
WINDOWS & DOORS MANUFACTURING INC.
TEL: 705 382 9090 FAX: 705 382 0990
DOUBLE SEAL INSULATING GLASS LTD.
TEL: 905-672-3232 FAX: 905-676-9449
DREAM DOORS INC
JEY HOMES
JEY NADARASAH
Sales Representative
416.668.0101
www.jeyhomes.ca
RE/MAX COMMUNITY
TEL: 416.287.2222
FAX: 416.282.4488
OLYMPIC DEVELOPMENTS
OLYMPIC WOOD WORK INC.
sivatravel
Kanakasundaram Siva
Executive Director
GOLD SPONSORS
www.karainews.com
Kannan Nadarajah
Top 5% Sales Representative in Canada
416-889-1083
SILVER SPONSORS
ANDY AUTO
QUALITY PRE-OWNED VEHICLES
Andy Thiruchelvam
Making Dreams Reality
Ravi R. Raveendran
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave. East, Suite #3 (Eglinton & Markham)
Scarborough, ON. M1J 2H6
Tel: 416-267-8221
RE/MAX
Raj Nadarajah
AIRPORT LIMO SERVICE 101
Airport Limo Driver
airportlimo101@gmail.com
Chandran Thiru
416.312.3061
Limo Services 24/7 and from Toronto Pearson Airport
ஊடக அனுசரணை:
ஈழநாடு
காரை.இந்து பழைய மாணவர் சங்க கனடாக் கிளையின் ஏற்பாட்டில்
காரை. இந்துவின் மேம்பாட்டு நிதிக்காக
பின்னணிப் பாடகர் "சூப்பர் சிங்கர்"
சாய் சரண்
வழங்கும்
இன்னிசை முழக்கம்
MEGA TUNERS
கனடா கந்தசுவாமி கோவில் கலை அரங்கு
733, Birchmount Road, Scarborough
MAY 19, 2019 - SUNDAY @ 5:30PM
அன்பளிப்பு
$20 $50 VIP $100
மேலதிக தொடர்புகளுக்கு: 416-804-0587 / 647-639-2930

**கனடா சைவசித்தாந்த மன்றத்தின் தலைவரும், ஈழத்தில் பிரபல்யம்பெற்று விளங்கிய கணிதபாட பட்டதாரி ஆசிரியரும், கனடா-காரை கலாசார மன்றம் என பெயர்மாற்றம் பெற்ற ஈழத்துச் சிதம்பர திருத்தொண்டர் சங்கத்தின் ஸ்தாபக உறுப்பினர்களுள் ஒருவரும், பழைய மாணவர் சங்க கனடாக் கிளையின் போசகருமாகிய 'சிவநெறிச்செல்வர்' தி.விசுவலிங்கம் அவர்கள் 'இன்னிசை முழக்கம்' இசை நிகழ்விற்கு வழங்கிய வாழ்த்துச் செய்தி:**



காரைநகர் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க கனடாக் கிளையின் ஒழுங்கமைப்பில் நடைபெற உள்ள இன்னிசை நிகழ்வாகிய 'இன்னிசை முழக்கம்', மே 19, 2019 ஞாயிற்றுக்கிழமை நடைபெறுகின்ற-து. கல்லூரியின் முக்கிய தேவைகளாக இருந்து, அரச உதவிகள் கிடைக்கப் பெறாதவைக்கு உதவும் வகையில் நிரந்தர வைப்புத் திட்டம் ஒன்றினை ஏற்படுத்துகின்ற நோக்கத்தை நிறைவேற்றுமுகமாக நடைபெறுகின்றது. இந்த உயரிய பணியை நிறைவேற்றுவதில் கல்லூரியின் பழைய மாணவர்களும் மற்றும் இசைப் பிரியர்களும் கச்சேரி நிகழ்வில் திரளாகச் சேர்ந்து முழு ஆதரவு நல்க எல்லோரையும் பணிவன்புடன் வேண்டுகிறேன்.

பின்னணிப் பாடகர் 'சுப்பர் சிங்கர்' சாய் சரண் அவர்களும், அணிசெய் கலைஞர்களும் பல பக்திப் பாடல்களுடன் கூடிய இன்னிசைக் கச்சேரியை வெகு விமரிசையாக வழங்க உள்ளனர்.

'நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர்!
நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்!
அதுவு மற்றவர் வாய்ச்சொல் அருளீர்!
ஆண்மையாளர் உழைப்பினை நல்கீர்'

என மகாகவி சுப்பிரமணிய பாரதியார் பாடியது போல் தம்மாலான நன்கொடைகளையும் அளித்து ஆதரவு நல்க வாரீர். காரைநகர் இந்துக் கல்லூரி அபிவிருத்திக்காக இன்னிசைக் கச்சேரி நிகழ்வை ஒழுங்கு செய்து, கல்லூரி மேம்பாட்டு நிதியைப் பெற்றுக் கொள்ள அயராது பாடுபடும் பழைய மாணவர் சங்கத்தினருக்கும், அனுசரணை வழங்கி வரும் ஆதரவாளர் களுக்கும் மற்றும் சகல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கிவரும் அன்பர்களுக்கும் எனது உளமார்ந்த நன்றிகளையும் வாழ்த்துக்களையும் கூறுகிறேன்.

பின்னணிப் பாடகர் 'சுப்பர் சிங்கர்' சாய் சரண் அவர்களுக்கும், அணிசெய் கலைஞர்களுக்கும் உள்ளம் நிறைந்த நன்றிகளையும் பாராட்டுகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் இன்னிசைக் கச்சேரி மிகச் சிறப்பாகவும், பக்திபூர்வமாகவும் வெற்றிகரமாக நிகழவும் இறைவன் திருவருள் பாலித்தருள வணங்கி உளமார வாழ்த்துகிறேன்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு.
அன்பே சிவம்.
தி. விசுவலிங்கம்

**Karai Welfare Society(UK)**
**காரை நலன்புரிச்சங்கம் (UK)**
127 Cassiobury Drive, Watford, Herts WD17 3AH, UK
Tel 01923 226000, Fax 01923 238289, email: info@karainagar.org
www.karainagar.org Charity No 1126413

May 08, 2019

தலைவர்/செயலாளர்,
யா/காரை இந்து கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா
கனடா

அன்புடையீர்,

**வாழ்த்துச் செய்தி**

காரைநகர் மண்ணின் முக்கிய பாடசாலைகளில் ஒன்றான காரைநகர் இந்து கல்லூரிக்கு அதன் பழைய மாணவர் சங்க (கனடா) அமைப்பாக, நீங்கள் செய்யும் சேவை, காரைநகர் மண்ணின் கல்வியை மேம்படுத்துவதை உணர்வதில் நாம் மகிழ்ச்சி அடைகிறோம்.

மேற்படி கல்லூரியின் நடைமுறை செலவினங்களுக்கு பங்களிப்பை வழங்கத்தக்க ஒரு நிதி ஆதாரத்தை உருவாக்கும் நோக்கில், "இன்னிசை முழக்கம்" எனும் நிகழ்ச்சி "சூப்பர் சிங்கர்" புகழ் சாய் சரணை வரவைத்து, வரும் "மே" மாதம் 19ம் திகதி தங்களால் நடாத்தப்பட இருப்பதை அறிந்து மகிழ்ச்சி கொள்வதோடு, மனமார்ந்த வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

குறிப்பிட்ட நிகழ்ச்சி சிறப்புற நடக்கவும், உங்கள் நோக்கம் இனிதே நிறைவேறவும், எல்லாம் வல்ல ஈழத்து சிதம்பரத்தில் உறைந்திருக்கும் அந்த ஈசனை வேண்டி நிற்கின்றோம்.

அறிவு அறிவு என்று அங்கு அரற்றும் உலகம்
அறிவு அறியாமை யாரும் அறியார்
அறிவு அறியாமை கடந்து அறிவானால்
அறிவு அறியாமை அழகிய வாறே.
- திருமந்திரம்

நன்றி

தங்களை வாழ்த்தும்

நிர்வாகம்.
பிரித்தானிய காரை நலன்புரிச் சங்கம்.

President: Mr M Yogarajah 07881 650 375 | Secretary: Mr K Vigneeswaran 07776 303 739 | Treasurer: Mr R Tharsan 07414 618 368

**வாழ்த்துக்களும் அனுசரணையும் வழங்குகின்றது 'எனது ஊர் காரைநகர்' மற்றும் www.karainews.com இணையத்தளம்**

கனடா காரை இந்து பழைய மாணவர் சங்கம் கனடா வாழ் காரைநகர் மக்களின் ஆதரவோடு காரைநகர் இந்துக் கல்லூரின் அடிப்படை அத்தியாவசிய தேவை-களை நிவர்த்தி செய்யும் பொருட்டு வழங்கவுள்ள நிரந்தர வைப்பு நிதியத்திற்கு நிதி சேகரிக்கும் பொருட்டு நடாத்துகின்ற இசை நிகழ்ச்சிக்கு ஆதரவு வழங்குவதையிட்டு பெரும் மகிழ்வு கொள்கின்றது.

காரைநகர் இந்து கல்லூரியின் வளர்ச்சியில் அரச சார்பற்ற உதவிகளை பெற்று வழங்க கனடா காரை இந்து பழைய மாணவர் சங்கம் எடுத்துக் கொள்ளும் முயற்சிகளுக்கு 'எனது ஊர் காரைநகர்' மற்றும் www.karainews.com ஊடாக கனடா வாழ் காரை அன்பர்கள் வழங்கும் உதவி-களை நேரடியாக இத்திட்டத்திற்கு வழங்கி அனுசரணை வழங்குகின்றது.



"The first duty of revolutionary is to be educated"
- Che Guevara

# காரைநகரின் நன்னீர் பிரச்சினை தொடர்பான காரைநகர் மக்களின் ஆய்வுக் கூட்டம் (பிரித்தானியா)

## 14.04.2019

பிரித்தானியா இலண்டனில் வதியும் காரைநகர் மக்கள் பலர் ஒன்றிணைந்து காரைநகரில் தற்போது அதிகரித்து வரும் நன்னீர் தட்டுப்பாடு குறித்த பிரச்சனைகளை ஆராய்ந்து அது தொடர்பான ஆராய்ச்சிகள் மற்றும் அதற்கான அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பாக எடுக்க ப்பட வேண்டிய செயற்பாடுகள் தொடர்பாகவும் கலந்துரையாடினர். இக்கலந்துரையாடலில் கலந்து கொண்டு காரைநகர் நன்னீர் பிரச்சனை தொடர்பாக தமது கருத்துக்களையும் நடைமுறை ப்படுத்தப்பட வேண்டிய செயற்பாடுகளையும் தெரிவித்தோர் வருமாறு:

திரு த. சோதிலிங்கம், (வேதரடைப்பு)
திருமதி தேவகுமாரி சோதிலிங்கம் (திருநெல்வேலி),
திரு ப. சிவானந்தராசா (வேதரடைப்பு)
திருமதி சிவசோபனா சிவானந்தராசா(வேதரடைப்பு),
திரு சி. சிவராஜா (பலகாடு)
திரு க. ராஜரத்தினம்(புதுறோட்)
திரு. தி. ரகுபதிராஜா(புதுறோட்)
திருமதி தவராணி நகுலேந்திரம் (கோவளம்)
திருமதி தியாகராஜா(கோவளம்),
திருமதி T. சிவசோதி(வாரிவளைவு)
திரு T. சிவசோதி(கோவளம்) ,
திரு M. பாலமுரளி (வாரிவளைவு)
திரு கு. விக்னேஸ்வரன்(கருங்காலி),
திரு ரா. சிவசுப்ரமணியம்(புதுறோட்)
திரு தி. ஞானேஸ்வரன்(கோவளம்),
திரு ச. சண்முகராஜா(புதுறோட்)
திரு ரா. சிறி (பலகாடு)
திரு செ. பிரவின்சங்கர் (பலகாடு),
திரு வே. நடராஜா(வலந்தலை)
திரு ந. ரவீந்திரன் (புதுறோட்)
திரு சிவானந்தி (பொறியியலாளர், இலங்கையிலிருந்து தொலைபேசி ஊடாக)

மேலும் 14.04.2019 அன்று நடை பெற்ற இக்கலந்துரையாடல் மூலம் பெறப்பட்ட கருத்துக்கள் மற்றும் காரைநகர் நன்னீர் பிரச்சனை தொடர்பாக அறிந்து கொள்ளப்பட வேண்டிய விடயங்கள் வருமாறு:

### கூட்டஅறிக்கை (Minutes)

தமிழ் சித்திரை வருடப்பிறப்பு (14-04-2019) அன்று லண்டன் Centre Harrow, 9 Scott Cres. Harrow. London, UK என்ற முகவரியில் காரைநகரைச் சார்ந்த 25 பேர்கள் சந்தித்து காரைநகரில் தண்ணீர் வளங்களும் அதன் பாதிப்புக்களும், சிறக்க செய்ய வேண்டிய வழி வகைகள் பற்றியும் உற்சாகமான சந்திப்பு நடைபெற்றது.



சந்திப்பில் காரைநகரில் நீர்ப்பிரச்சனை தொடர்பாக வரலாற்று ரீதியான, புவியில் ரீதியான, மக்கள் வாழ்வு ரீதியான நடைமுறைகளும் அவைசார் அறிவியலும் எல்லோருமாக பேசியிருந்தோம். கடந்தகாலங்களில் காரை மக்கள் சந்தித்த கூட்டங்களில் இப்படியான ஒரு அறிவுபூர்வமான கருத்து பகிர்வை செய்ய முடியாதிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

1980களிலிருந்து தண்ணீர் நிலமைகள் பற்றியும் இப்போது நடைமுறைக்கு உகந்த முறையில் இயக்கப்படும் முறைகளில் சிலபற்றியும் இக்கருத்துப் பரிமாற்றம் இருந்திருந்தது. கலந்து கொண்டவர்கள் ஒரே ஊரவர்களும் இனபந்துக்களாகவும் இருந்தமையும் நல்ல மனநிறைவையும், விட்டுப் போன உறவுகளை மீண்டும் தொடர்வுபடுத்துவதிலும் பலர் நிறைவுகண்டனர். அமரர் தியாகராசா மகேசுவரனின் சேவைகளையும், எமது முன்னோர்களின் சேவைகள், பணிகள், அவர்களது நினைப்புக்களையும் மீளநினைவுபடுத்தியது நல்ல நிறைவு, தரமான சந்திப்பு. இது போன்ற வேறுபாடுகளற்ற பிரிவனைகள் அற்ற சந்திப்புக்கள் தொடர்ந்து காரைநகர் மக்களாகிய நாம் செய்ய வேண்டும் எனபேசிக் கொண்டோம்.

### காரைநகரின் நில அமைப்பும் தண்ணீர் வளங்களும்

நாம் பேசும் விடயம் காரைநகரினுடைய பிரச்சனை மட்டுமல்ல இன்றய உலகத்தில் பல பெருந் தொகை



மக்களது பிரச்சனை இதுவாகும். இன்னும் சில வருடங்களில் தண்ணீருக்காக யுத்தங்கள் கூட உருவாகலாம் என்றும், ஆறுகள் குளங்களுக்கான உரிமைகள் விடயத்திலும் பிரதேசங்களின் உரிமைகள் விடயத்திலும் சர்வதேச விடயம் எனப்பல முரண்பாடுகள் உருவாகலாம் எனவும் தெரிய வருகின்றது.

மனிதர்கள் குடிப்பதற்க்கு மழை நீரையே மனிதகுலம் ஆரம்பித்தகாலம் தொடக்கம் பாவித்துக் கொண்டிருக்கின்றனர் என்பது பலர் புரிந்து கொள்ளாத விடயமாகும். மழை, வெள்ளம், நீர், மனிதவாழ்வு என்பன ஒரு சுழற்சியான இயக்கமாகும். இவை மனிதருக்கு கடவுளினால் வழங்கப்பட்ட கொடையே மழையாகும். அந்நீரை நாம் தேக்கிவைத்து பாவிப்பதே கடவுளுக்கு செய்யும் நல்வழிபாடாகும். குடிநீர் என்பது கடல் நீர் மழையாக பெய்வதினாலேயே எல்லா உலகமக்களும் பெற்றுக் கொள்கின்றார்கள், அவை ஆறுகளாக, குளங்களாக அல்லது நிலக்கீழ் நீராக சேகரிக்கப்பட்டவைகளையே நாம் பெற்றுக் கொள்கின்றோம். இந்நீர் மழைகாரணமாக சேகரிக்கப்பட்ட நீராகும்.
மழை காரணமாக உருவாகும் வெள்ளத்தில் பெருந் தொகையான நீர் அநியாயமாக மீண்டும் கடலில் போய் சேர்வதாலேயே மனிதர்கள் குடிநீர் பிரச்சனையில் அவதிப்படுகின்றார்கள், இயற்கையாக கடல் நீர் மழையாக பெய்யும் போது அந்நீரை நாம் நிலத்துக்கு கீழ் அனுப்புவதில்லை அதனை விடுத்து அந்நீரை கடலில் மீண்டும் போக அனுமதிப்பதே இப்பிரச்சனையின் மிகமுக்கிய காரணமாகும். இயற்கை எமக்குதரும் இலவசகொடையை, வளத்தை நாம் சரியாக பயன்படுத்தாமலே மனிதகுலம் இவ்வளவு சிக்கல்களையும் சந்திக்கின்றது.

மழை நீர் குளங்களில் நீர் நிலைகளின் ஊடாக தேக்கி வைக்கப்பட்டு நிலத்துக்கீழ் அனுப்பப்பட வேண்டியது மனிதர்களாகிய எமது கடமையாகும்.
நீர் நிலைகளில் சேர்க்கப்படும் நீர் படிப்படியாக நிலத்துக்கு கீழ் சென்றடைந்து அவை மீண்டும் எம்மால் பாவிக்கப்படுகின்றது என்பதே உண்மையும் காரைநகர் மக்கள் குடிநீர் பெறும் ஒரேவழியுமாகும்.

மழைநீரை சேகரிக்கும் போது நீர் நிலைகளில்



சேகரிக்கும் போது அவை சுற்றிவர இருக்கும் மண் வளங்களை மேம்படுத்துவது மட்டுமல்லாமல் இயற்கையாக மரம் செடி கொடி வகைகளையும் வளம் படுத்தி மக்களுக்கு உணவளிக்கின்றது. அத்துடன் இம்மரங்கள் செடிகளின் குளிர்மை காரணமாக மேலும் மழையை ஈர்த்துக் கொள்கின்றது என்பது விஞ்ஞானபூர்வமானது.

இந்த மழைநீரின் அருமையை எமது முன்னோர்கள் உணர்ந்ததன் காரணமாகவே அவர்கள் இலங்கையில் 22000 குளங்கள் நீர் நிலைகளை கட்டினார்கள். அத்துடன் பராக்கிரமபாகு மழை நீரில் ஒருதுளியேனும் கடலில் விழக்கூடாது என்பதற்காகவே பராக்கிரம சமுத்திரத்தை கட்டினான் என்கின்றது எமது இலங்கை வரலாறு.

இவையாவும் மழைநீரை நாம் எவ்வளவு அக்கறையாக குளங்கள் நீர்நிலைகளில் தேக்கிவைக்க வேண்டும் என்பதை எமக்கு எடுத்துரைக்கின்றன. எவ்வளவுக்கு எவ்வளவு நீரை தேக்கிவைக்கிறோமோ அவ்வளவுக்கு எமது மண் வளம் செழுமை பெறும், எமது சூழல் அபிவிருத்தி பெறும் எமது மக்களின் வாழ்வு செழுமை பெறும், நல்ல குடிநீர் கிடைக்கும். இவற்றுக்கு மாறாக நாம் மழை நீரைசேகரிப்பதை அக்கறையற்று இருப்போமானால் அவ்வளவுக்கு நாம் நீர் இன்றி கடின வாழ்வு வாழ வேண்டியிருக்கும். ஆகவே நாம் நல்வாழ்வு வேண்டுமானால் நாம் அவ்வளவுக்கு நீரை நிலத்துக்கு கீழ் அனுப்பவேண்டும் எமது முன்னோர்களின் வாழ்வு சிறப்பாக அமைந்திருந்தமைக்கு அதுவே முக்கிய காரணமாகும்.

காரைநகர் தீவாக இருப்பதனால் காரைநகரில் எவ்வளவு மழை நீரை சேகரிக்கின்றோமோ அவ்வளவு நாம் நன் நீரை பெறமுடியும். காரைநகரின் நிலத்து கீழ் நீர்சேகரிப்பு வளையங்கள் காரைநகரை விட்டு வெளியிடங்களுக்கு நீட்சி கொள்வதில்லை (தீவாக இருப்பதனால்). இங்கிருந்து தான் மனிதர்களின், இனங்களின், தமிழர்களின், காரைநகர் மக்களின் நீராண்மை தொடங்குகின்றது. இவற்றை நாம் செய்யாமல் எமது வாழ்வை, எமது மக்களை, எமது ஊரை, எமக்கு தேவையான நன்நீரை பெறமுடியாது.

இவைகளே எமது ஊர்மக்களின் உயிர் துடிப்பான பிரச்சனையும் ஆகும் ஆகவே நாம் ஒவ்வொருவரும் எமது ஊரில், எமது வீடுகளில், எமது ஊரில் உள்ள குளங்கள், நீர்நிலைகளில் மழைநீரை கேசரிக்கும் திட்டங்களை அரசின் உதவியாக பிரதேசசபைகளின் உதவியுடன் உடனடியாக ஆரம்பிக்க வேண்டும்.

அண்மையில் காரைநகர் மக்களுக்கு தேவையான குடிநீர் காரைநகருக்கு வெளியே இருந்து வாகனங்களிள் மூலமாக எடுத்துவருவது பற்றியும்

அந்நீரை விநியோகம் செய்முறை பற்றியும்,அதனால் ஏற்படும் பிரச்சனைகள் பற்றி ஆராயப்பட்டபோதிலும் அவற்றை நாம் இங்கு முக்கிய விடயமாக குறிப்பிடவில்லை.

இவை பற்றிய பிரச்சனைகளில் பலரின் கருத்தாக காரைநகரிலேயே நன்நீர் உள்ளதாகவும் அந்நிலைகள் சரியாக அடையாளம் காணப்பட்டு அந்த கிணறுகள் சுத்தம் செய்யப்பட்டும் பராமரிக்கும் முகாமைத்துவம் பற்றிய அலுவல்கள் கவனத்தில் கொள்ளப்படவேண்டும் எனவும், வெளியூர்களில் காரைநகருக்கான நீர் எடுக்கும் இடங்களில் அவ்வூர் மக்களினால் ஏற்படும் அதிருப்திகள் எதிர்ப்புக்கள் பற்றியும் கருத்துக்கள் பரிமாறப்பட்டன.

காரைநகர் மக்களுக்கான நீரை காரைநகர் பிரதேசத்தில் இருந்து பெறுவது பல்வகைளிலும் சிறந்ததும் செலவுகுறைந்ததும் இயற்கையானதும் ஆகும், காரைநகர் மக்களுக்கான குடிநீர் தற்போது 8 பவுசர்களில் கொண்டு வரப்படுகின்றது. இந்த அரச, தனியார் நீர் வழங்களை மக்கள் எவ்வளவு காலத்துக்கு பெறமுடியும் என்பதையும் அதைவிட முக்கியமாக காரைநகர் பிரதேச விருத்தி என்பது பிற இடங்களிலிருந்து பவுசர் மூலம் கொண்டுவரப்படும் நீரினால் மேம்படுத்த முடியாது என்பதையும் இங்கே கவனிக்க தவறக்கூடாது.

காரைநகர் பிரதேசத்துக்கு நீர் என்பது குடிக்கவும் சமைக்கவும் என்பதற்கும் அல்ல, மாறாக காரைநகர் மக்களின் மண்வளம் மேம்பட நீர்த்தேவை அவசியமானது என்பதை மறக்க கூடாது அதற்காக காரைநகரிலேயே மழை நீரை தேக்குவதன் மூலமே காரைநகர் மண்ணை வளப்படுத்த முடியும் என்பதை நாம் தெளிவாக புரிந்து கொள்வது அவசியமாகும். அத்துடன் காரைநகர் மண் வளப்படும் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இதற்க்கு மேலாக காரைநகர் பிரதேசத்துக்கு எவ்வளவு காலத்துக்கு எத்தனை வருடங்களுக்கு குடிநீர் வெளியிலிருந்து கொண்டு வந்து கொடுக்க முடியும்



என்பது நாம் கேட்க வேண்டிய கேள்வியாகும். அதேவேளை காரைநகர் மக்களை ஏன் நீர் வளம் உள்ள இடங்களுக்கு குடிபெயர்த்து வாழவைக்க கூடாது, காரைநகர் பிரதேசத்தை வனாந்தரம் என அறிவித்து கைவிடக் கூடாது என்ற கேள்வியையும் இணைத்து கேட்க முடியும் அல்லவா?

நாமே எமக்கான பிரதேசத்தை அபிவிருத்தி செய்ய வேண்டும். காரைநகரை அதன் நீர்வளத்தை வளரத்தெடுத்து எமது காரைநகரை வளமான பிரதேசமாக்க வேண்டும். 1978 ஆம் ஆண்டு இலங்கை அரசு பிரதேசசபைகளுக்கு அதிகாரங்களை பலப்படுத்தி பிரதேசங்களை அபிவிருத்தி செய்வது பற்றியும் அதுவே தமிழரின் அரசியல் உரிமைப் பிரச்சனைக்கு தீர்வாகும் எனவும் அறிவித்திருந்தது . அவை போராட்ட இயக்கங்களின் தலையீட்டாலும், தமிழ் மக்களின் அரசியல் தீர்வும் அபிவிருத்தியும் என்பதில் அறிவியல் அனுபவமின்மையும் அவை நடைமுறைக்கு வராது போயின.

மக்களை அவர்களது பாரம்பரிய பிரதேசங்களில் பலமாக வாழவைக்க வேண்டுமாயின் மழை நீரை சேமிப்பதும் மழை நீரை நிலத்துக்கு அடியில் போய்ச் சேரவைப்பதுவே தீர்வாகும். இது காரைநகருக்கு மட்டுமல்ல இந்தபூமியில் வாழும் ஒவ்வொரு பிரதேசத்துக்குமான பொதுச் சூத்திரமாகும். காரைநகரில் இந்த மழை நீர்த் தேக்கத்தை வளப்படுத்தி மக்களை நீர்ப்பிரச்சனையிலிருந்து காப்பாற்றியும் காரைநகர் மண்ணை வளப்படுத்தி தன்னிறைவான பிரதேசசபையாக சர்வதேசத்துக்கு நல் உதாரணமாக திகழ முடியும் என நாம் நம்புகின்றோம். அத்துடன் காரைநகரில் தரமான பயிர்ச்செய்கை, சிறுதானியங்கள், மேலும் தரமான சேதன மரக்கறி வகைகளையும் உற்பத்தி செய்து இன்றய உலகில் சிறுஅபிவிருத்தி உற்பத்தி நிர்வாக அலகாக எமது காரைநகர் பிரதேசத்தை உயரத்த முடியும் என்பதை திடமாக நம்புகின்றோம்.

இவை எமது வெற்று வார்த்தைகளோ எழுத்துக்களோ அல்ல நாம் திடமாக நம்புகின்றோம். இதை காரைநகர் மக்களும் தமது பிரதேச அபிவிருத்தி என்ற மந்திரமாக நம்புவதே இங்குள்ள முக்கிய விடயமாகும். இவற்றுக்கு தேவையான பணம் மற்றும் உதவிகள் பல இடங்களிலிருந்தும் பெறமுடியும். சிலவேளை சிலர் கேட்க கூடும் யோசிக்க கூடும் கிளிநொச்சியிலிருந்து தண்ணீர் கொண்டு வரலாம் தானே அதற்காக அரசும் மாகாணசபையும் முயற்ச்சிகள் எடுக்கின்றன என்று, உண்மையே... இது போன்ற செயல் திட்டங்களுக்கும் வரையறைகள் உண்டு அவைபற்றி ஒரு தனியான சந்திப்பை ஏற்ப்படுத்தி பேசவேண்டும்.

எது எப்படி இருப்பினும் கிளிநொச்சித் தண்ணீரும் காரைநகர் மண்ணின் வளத்தை மேம்படுத்தாது என்பதையும் அவை மனிதர்களின் சுயதேவை

-களுக்காகவே இருக்கும் என்பதையும் நாம் கவனத்தில் எடுக்கவேண்டும்.

சிலவேளை மாகாவலி ஆறு கிளிநொச்சிக்கு திருப்பப்பட்டால் நிலைமை வேறாக இருக்கலாம் அதைப்பற்றியும் விரிவாக பேசுவோம். எது எப்படியோ தண்ணீர் என்பது குடிக்கவும் குளிக்கவும் மட்டுமல்ல மனிதருடன் சமூகத்தில் இதர உயிரினங்களுடன் இயற்கையாக இணைய வேண்டியதொன்றாகும் என்பதை தெளிவுபடுத்திக் கொள்வோம்.

சூழல் என்பதும் காரைநகர் கிராமம் என்பது தனிய மனிதர்க்களுக்கான கிராமம் இல்லை மாறாக காரைநகரில் வாழும் இதர உயிரினங்களுக்குமான வாழ்விடம் என்பதையும் அவைகளும் எமது சுற்றாடலின் உறுப்பினர்கள் என்பதையும் உணரதவறக் கூடாது.

வெறுமனே நீரை வீட்டு வாசலில் வழங்குவது என்பது நகர வாழ்க்கை முறைக்கு ஒப்பானதாகும் ஆனால் மக்களின் பொருளாதார நிலைமைகள் அப்படியில்லை என்பதை கவனத்தில் கொள்வோம்.
இலங்கையில் 1977-1980 காலப்பகுதியில் இலங்கை தமிழர் அரசில் பிரச்சனைக்கான அரசியல் தீர்வாக பிரதேச சுயாட்சி பற்றி பேசப்பட்டபோது காரைநகரில் வேதரடைப்பு கிராம முன்னேற்ற சங்கத்தில் கிராம அபிவிருத்தி பற்றியும் மழை நீர்த்தேக்கம் பற்றியம் காரைநகர் நிலத்து நீர்வள அதிகரிப்பு பற்றியும் பல மாதங்களாக பேசியிருந்தோம், அதுமட்டுமல்ல வேதரடைப்பு கிராமத்தில் சோலையான் விளையாட்டுக் கழகத்தினரின் உதவியுடன் காரைநகர் வடக்கில் மழைநீர்த்தேக்கும் செயல்திட்டத்தை செயல் படுத்தியிருந்தோம்.

அன்று வேதரடைப்பை சார்ந்தவர்களான இலங்கை வானியல் திணைக்களத்தின் உத்தியோகத்தர் திரு. மிருதங்கம் வைத்திலிங்கம், ஆசிரியர் திரு. துரை சுவாமி, திரு. பாலச்சந்திரன், யாழ் கச்சேரி உத்தியோகத்தர் திரு. கோபால் மாமா, விவசாய திணைக்கள உத்தியோகத்தர் திரு. சோமசுந்தரம், இலங்கை துறைமுக அதிகாரியாக இருந்த திரு.சிவசுப்பிரமணியம்



இவர்களுடன் பேராதனை-யாழ் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் திரு. இராமகிருஷ்ணன் போன்ற பலர் எமக்கு காரைநகர் நீர் நிலைமைகளும் அவற்றின் முக்கியத்துவங்கள் பற்றியும் காரைநகரில் நீரின் இயக்கப் போக்குகள, நிலத்து நீர் வளையங்களின் பாதைகள் போன்றவற்றின் அறிவூட்டல்களை செய்திருந்தனர்.

இந்த பயிற்சிப் பட்டறைகளில் பங்குபற்றியும் காரைநகர் வடக்கில் செயல் திட்டங்களிலும் ஈடுபட்ட பலர் காரைநகர் வேதரடைப்பிலும், புலம் பெயர்ந்தும் வாழ்கின்றார்கள். மேலும் இணைந்து இயங்கிய திரு.ஏகாம்பரம், திரு.கந்தசாமி, திரு.சபாநாதன் போன்றோர் இன்று வேதரடைப்பிலும், மற்றும் திரு.நேரு மாஸ்டர் பிரான்சிலும், திரு.அமுதன் மாஸ்டர் கனடாவிலும் வாழ்கின்றார்கள். சோதிலிங்கம், விக்கினேஸ்வரன் லண்டனிலும் வாழ்கின்றார்கள். இவர்கள் அன்றைய சுற்றாடலியல் ஆய்வாளர்களாகும். இவர்களில் இன்றும் தொடர்ந்து இந்த பணிகளில் அக்கறையுடன் இயங்குபவர்களான திரு.சபான் அவர்களாகும்.



இன்று காரைநகர் சமூகத்தில் மக்கள் பலவீனமடைந்து இருக்கின்றார்கள், முதுமையடைந்து இருக்கின்றார்கள் என்ற கருத்து இருக்கின்ற போதிலும் இந்த செய்தி அடுத்த பரம்பரையினரிடம் கடத்தபடுவது அவசியம். அவர்கள் தொடர்ந்து அந்த மண்ணின் பிரஜைகளாக வாழப் போகின்றவர்கள் அவர்கள் வாழும் காலத்திலேயே தண்ணீர் பற்றிய பிரச்சனைகளை எதிர் நோக்கியிருப்பவர்கள் அவர்களிடம் நாம் இந்த கருத்துக்களை இந்த அறிக்கை ஊடாக பரப்பவேண்டும் என்பது எமது கருத்தாகும்.

எப்படி எமது கிராமத்து எமது முன்னோடிகள் எமக்கு தமது அறிவுகளை எம்மிடம் தந்தனரோ அதே போன்று நாமும் அடுத்த தலைமுறையிடம் இந்த செய்திகளையும் தரவுகளையும் விட்டு செல்ல வேண்டியுள்ளது ஆனால் அதிஸ்டவசமாக எமது

கருத்துக்களை நீண்ட பலகாலங்களாக பதிவு செய்து வைக்கும் தொழில் நுட்பம் இருப்பது மிகவும் சந்தோசமான விடயமேயாகும்.

அதேவேளை புலம்பெயர்ந்து வாழும் காரைநகர் மகக்களாகிய நாம் காரைநகரில் வாழும் மக்களுக்கு தேவையான தொழில் திறனை அதிகரிக்கும் வசதிகள் உதவிகளையும் ஏற்பாடு செய்து கொடுக்கும் பொறுப்புள்ளதையும் உணர்கின்றோம்.
புலம் பெயர்ந்து வாழும் காரைநகர் சங்கங்கள் அமைப்புக்கள் பலவழிகளிலும் காரைநகர் மக்களை தமது வளச்சேர்க்கைகளால் வளப்படுத்திக் கொண்டிருப்பதையும் நன்றியுடன் கவனம் கொள்வோம்.

**காரைநகரின் நிலத்துகீழ் நீர் சேகரிப்பு வளையங்கள் என்பது என்ன? அவற்றின் நீட்சி என்பது என்ன?**

காரைநகர் தீவாக இருப்பதனால் காரைநகரின் நிலநீர் வளையங்கள் காரைநகரை விட்டு வெளியே நீட்சி கொள்வதில்லை என்பதை அறியத்தந்து, காரைநகரில் நிலக்கீழ் இருக்கும் பெரிய நீர்வளையமானது காரைநகர் வடக்கு ஆலங்கன்று வைரவர் கோவிலடித்திலிருந்து மேற்காக ஒரு கிளை மூடுசாந்து நன்நீர் கிணறு நோக்கியும் அதன் வழியே சாம்பலோடை மயானத்தில் சில நன்நீர்க் கிணறுகளும் வடக்காக மொட்டையர் சுடலை நோக்கியும் அதனிடையே சில நன்நீர்க் கிணறுகளும், இந்த வடக்காக நோக்கி செல்லும் கிளை வளையம் மொட்டையர் சுடலையிலிருந்து காரைநகர் சிவன் கோவிலை நோக்கி செல்கின்றது என்றும் அதன் வழியே சிவன் கோவிலுக்கு பின்புறமாக சில நன்நீர் கிணறுகளையும் தந்திருக்கின்றது.

காரைநகர் ஆலங்கன்று வைரவர் கேவிலிடத்தை மையமாக வைத்து அந்த சுற்றுப் புறத்தில் உள்ள நன்நீர்க் கிணறுகளை அவதானித்தால் நிலக்கீழ் வளையத்தின் வரைபடத்தை இலகுவாக விளங்கிக் கொள்ள முடியும்.

அடுத்த பெரிய நீண்ட கிளையாக இந்த நீர்வளையம் இலந்தைச்சாலையில் மேசன் நாகலிங்கம் வீட்டுக்கு முன்பாக ஒரு நன்நீர் கிணற்யையும் அதை தொடர்ந்து மல்லிகையில் மூன்று கிணறுகளையும் நீர் நிறையும் மல்லிகை வெட்டை ஊடாக புதுறோட்டில் நாகமணி நன்நீர்க்கிணற்றையும் தந்து இலகடி நோக்கிச் சென்று பின்னர் காரைநகர் மத்திய பிரதேசமான சம்பந்தர்கண்டி, மருதடிப்பிள்ளையார் கோவில் வரைக்கும் நீண்டு இருக்கின்றது. இந்த நீர் வளையம் என்பதை வேதரடைப்பு கிராம முன்னேற்றசங்கத்தில் திரு.வைத்திலிங்கம் (மிருதங்கம் வைத்தலிங்கம்) அவர்கள் எமக்கு தனது புலமையை கற்று தந்திருந்தார் என்பது இங்குகுறிப்பிடத்தக்கது.
**நீர்வளையத்தில் ஆழம் நீரின் செறிவு தொடர்பான கருத்து**

ஆலங்கன்று வைரவர் கோவிலிடத்தில் இந்த நீர் வளையத்தின் ஆழம் அல்லது நீரின்உயரம் குறைவானதாகவும் இந்த நீர்வளையத்தின் முடிவடமாக சம்பந்தர்கண்டி, மருதடிப் பிள்ளையார் கோவிலடியில் இந்த நீர்வளையத்தின் நீரின் உயரம் பெரியதாகவும் இருக்கின்றது. இதன் காரணமாகவே மருதடி, சம்பத்தர்கண்டி பிரதேசங்களில் காரைநகரில் என்றும் நீர்ப்பஞ்சம் ஏற்ப்படுவதில்லை. மக்கள் நீருக்காக வேறு இடங்களுக்கு போவதில்லை. அது மட்டுமல்ல இப்பிரதேசங்களில் நீர் போதியஅளவு தொடர்ந்து இருப்பதும் ஆகும்.
ஆனால் கோடை காலத்தில் காரைநகர் ஆலங்கன்று வைரவர் கோவிலடியிலும் மூடுசாந்து கிணற்றிலும் தண்ணீர் விரைவாக வற்றி விடுவதும் அதிகாலையில் நீர் இருப்பதும் மதிய நேரம் மாலையில் தண்ணீர் குறைவாக இருப்பதும் ஆகும்.

அதேபோல ஆலங்கன்று வைரவர் கோவிலடியில் கிணறுகள் ஆழம் மிகவும் குறைவாகவும் சம்பந்தர்கண்டி கிணறுகள் மிகவும் ஆழமானதாக இருப்பதையும் காணலாம்.
ஆலங்கன்று வைரவர் கோவிலுக்கு வடக்கே கடற்கரைகளை அண்டிய பிரதேசங்களில் 5 அடி மட்டும் ஆழமான கிணறுகள் நிரம்பிய நீருடன் இருந்துள்ளன, அவை இன்றும் இருக்கின்றன. நீர் மழை காலத்தில் மட்டும் இருக்கும்.
காரைநகரில் இருக்கும் இந்த நீண்ட நீர்வளையம் தனக்கு மேலே பல நன்நீர்க் கிணறுகளை கொண்டிருப்பதையும் அவை இன்றும் மக்களுக்குநீர் வளங்கிக் கொண்டிருப்தையும் காணலாம்.
இந்த நீண்ட நீர்வளையம் ஒருதொடரச்சியான கால்வாய்க்கள் போன்ற தொடர்புகளை கொண்டதாகவே இருக்கவேண்டும் எனவும், அல்லது நிலத்து கீழ் உள்ளநீர் தேங்கும் குளங்களுக்கு கால்வாய் மூலம் தொடர்பு கொண்டது போன்ற அமைப்பாக இருக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு 1980 களில் வேதரடைப்பு கிராம அபிவிருத்தி சபையில் ஊர் நிலங்கள் நீர் அமைப்புக்கள் பற்றிய கருத்து பரிமாற்றங்களின் போது பேசப்பட்டிருந்தது.

இவற்றிற்கான எந்த அத்தாட்சிகளும் அன்று முன்வைக்கப்படவில்லை என்பதையும் கவனத்தில் கொள்ளவும். நேரடியாக இந்த பயிற்ச்சி பட்டறைகளில் கலந்து கொண்டவர்களில் நேருமாஸ்டர், சோதிலிங்கம், விக்கினேஸ்வரன் போன்றோர் வாழ்கின்றனர். இவை அன்றய காலத்தில் அவர்களது பொது அனுமானங்கள் கிணறுகளின் இடங்கள் போன்ற தரவுகளின்படி அவர்களால் பொதுவான முடிவுக்கு நீர்வளையங்களின் விடயங்களில் வந்திருந்தார்கள் எனலாம்.

இதர காரைநகர் பிரதேசங்களில் நிலக் கீழ்

நீர்வளையங்கள் இருப்பது பற்றிய முழுமையான தெளிவு இல்லாத போதிலும் அப்பிரதேசங்களில் நன்நீர்க் கிணறுகளில் மிகப் பெரும்பான்மையானவைகள் வயல்களை அண்டியும் பெரிய நன்னீர் நிலைகளின் பக்கமாகவுமே இருக்கின்றதை அவதானிக்கலாம். அல்லது சற்று துாரத்திலே உள்ள கேணிகளில் சேகரிக்கப்படும் மழைநீரின் காரணமாக நன்னீர் உந்தப்பட்ட நன்னீர் கிணறுகளாகவே இருக்கின்றன. வயல் வெளிகளில் தங்கி நின்று வடியும் நீர்களினால் நிலத்துகீழ் சேகரிக்கப்படும் மழை நீரே நன்னீர் கிணறுகளுக்கு வளம் சேர்ப்பதாக இருப்பதையும் அவதானிக்கின்றோம்.

அதே போன்று காரைநகர் தெற்கில் களபூமி பிரதேசங்களில் இருக்கின்ற நன்னீர் கிணறுகளும் வயல்வெளி மற்றும் பக்கத்தே உள்ள பெரிய நன்னீர் கேணிகள் நீர்நிலைகளினால் உந்தப்படும் நன்னீர்களாலும் களபூமி பகுதியில் நில அமைப்பின் கீழ் உள்ள இறுக்கமான கற்பாறைகளினிடையே சிறிய சிறிய குளம் போன்ற அமைப்புக்களில் சேகரிக்கப்படும் மழைநீரின் ஆதாரத்திலேயே களபூமியின் நன்நீர் கிணறுகளின் நீர்வளம் அமைந்திருந்தது என்பதையும் கவனத்தில் கொள்க.

காரைநகரில் வலந்தலையிலிருந்து வாரிவளவு வரையில் ஒரு நேர்கோடு கீறினால் இக்கோட்டின் வரைபடத்தில் காரைநகர் வடக்கு பகுதி மழை நீர் மிகவும் இலகுவாக நிலத்துக்கு கீழ் சென்றடையும் பண்பு கொண்டதாகவும் அதனை அடுத்து வாரிவளவிலிருந்து துறைமுகம் வரையிலான நிலம் ஓரளவு மழை நீரை நிலத்துகீழ் அனுப்பும் மண் நில அமைப்பை கொண்டதாகவும், காரைநகர் களபூமி பிரதேசம் நிலத்துக்கு கீழ் மழை நீரை அனுப்பும் மண் நிலபண்பு மிகவும் குறைவாக இருப்பதையும் காணலாம். ஆனால் பின்னர் கூறிய இரு பகுதிகளும் வயல்களில் உறையும் மழைநீரின் பயனாக கிணறுகள் நன்னீரை பெறுவதற்காக நில அமைப்பை கொண்டிருப்பதையும் காணலாம்.

**நிலக்கீழ் நீர்வளையத்துக்கு மழை வெள்ளத்தை அனுப்புவதே காரைநகரின் நன்நீர்ப் பிரச்சனைக்கு நிரந்தர தீர்வாகும்**

காரைநகர் வடக்கு வேதரடைப்பு வடகாட்டுப் பிரதேசம் மழை நீரை மிகவும் இலகுவாக நிலத்துக்கு கீழே அனுப்பும் நிலஅமைப்பை கொண்டதாக இருப்பதையும் இங்கு வேதரடைப்பு மற்றும் திண்ணைக்களி குளம் மூலம் காரைநகர் வடக்கில் பல பள்ளமான இடங்களில் தங்கும் மழை நீர், நிலத்துக்கு கீழ் அனுப்பப்படும் மழை நீரே காரைநகர் பெரிய நன்னீர் நிலகீழ் நீர்வளையத்துக்கு வளம் சேர்ப்பதாகும்.
இதுவே காரைநகர் மல்லிகை, புதுறோட்டு, நீலிப்பந்தனை, சம்பந்தர் கண்டி, மருதடிப்பிள்ளையார் கோவிலடி பிரதேசங்களின் நன்நீர் கிணறுகளுக்கு நீர்வளம் சேர்ப்பதுவாகும். இவற்றுடன் நீலிப்பந்தனை பிரதேசதத்தில் உள்ள பள்ளகாணிகள் நீலிப்பந்தனை கேணியும் நிலக் கீழ் நீர்வளையத்துக்கு நீர்வளம் சேர்க்கின்றது என்பதை அறிக.(வேதரடைப்பில் இந்த பள்ளக்காணிகளில் நெற்செய்கைகள் செய்திருந்தமையும் குறிப்பிடுவோம்).
இந்த மேற்குறிப்பிட்ட காரைநகர் பிரதேசங்களில் பள்ள காணிகள் போன்றவற்றில் சேகரிக்கப்படும் நீரில் கணிசமான பகுதி வெய்யில் காரணமாக ஆவியாகிவிடுகின்றது, (இதன் காரணமாக இப்பிரதேசங்களின் அருகே இருப்பவர்கள் அதிக ஈரப்பதன் உள்ள காற்றை சுவாசிகின்றார்கள்)மேலும் இந்தப்பகுதிகளின் வெள்ளத்தை எப்படியாவது வேறு இடங்களுக்கு திருப்பிவிட்டு தாம் வெள்ளப் பிரச்சனைகளிலிருந்து தப்பித்து கொள்ள செய்யும் முயற்ச்சி இறுதியில் இந்தமழைநீர் கடலைபோய்ச் சேர்ந்துவிடுகின்றது. மழைநீர் முற்றாக நிலங்களில் நின்று வற்றி அவை நிலத்துக்கு கீழ் போய்ச் சேருவதில்லை அல்லது முழுமையாக சேரவிடாது எமது நடவடிக்கைகள் தவறாக அமைந்து விடுகின்றன.

நிலத்துக்கீழ் நீர்வளைத்துக்குபோய் சேரும் நீரின் அளவை அதிகரிக்கும் முகமாக எமது முன்னோர்களால் செய்யப்பட்ட ஏற்பாடுகளில் ஒன்றே கேணிகள் குளங்களுக்கு பக்கத்தே தொட்டி போன்று அமைத்து ஒரு ஆழமான பகுதியை உருவாக்கி அதனை கட்டாக கட்டிவைத்தனர் இதன் மூலம் அதிகளவிலான நீரை நிலத்துக்கு கீழ் அனுப்புவதேயாகும். இதைவிட இந்த ஆழமான பகுதிக்கு வேறு எந்த நோக்கமும் இருந்திருக்கவில்லை என்பதை புரிந்து கொள்ளவேண்டும். சிலவேளை குளத்தில் கேணியில் தண்ணீர் அளவு குறைந்த போது இந்த ஆழமான பகுதியில் இளைஞர்கள் குதித்து குளிப்பதும் உண்டு. இந்த குழியில் அகப்பட்டு இறந்த கதைகளும் உண்டு.

காரைநகரில் அளவுக்கு அதிகமாக ஒவ்வொரு குடும்பமும் தத்தமது வளவுகளில் கிணறுகள் அமைத்திருப்பதும் தண்ணீர் அளவுக்கு அதிகமாக நீராவியாக வெளியகற்ப்படுவது நடைபெறுகின்றது. இன்று அந்த கிணறுகளில் பல பாவிக்கப்டாமல் இருப்பதும் தூர்ந்து போயும் இருக்கின்றன.

இந்த கிணறுகளில் பாவிக்காத கிணறுகளையும் மூடி விடவேண்டும் அல்லது இக்கிணறுகளை மிகவும் ஆழமாக்கி அதனுடாக மழைநீர் வெள்ளத்தை நிலத்துக்கு கீழ் அனுப்பவேண்டும்.
தேவைக்கும் பாவிக்க முடியாது கிணறுகளை மூடி விடவேண்டும். மழை காலத்தில் வெள்ளம் தேங்கும் அல்லது மழை வெள்ளம் கடலுக்கு பாய்ந்தோடும் இடங்களில் அல்லது அவற்றுக்கு அண்மையான கிணறுகளை மிகவும் ஆழமாக்கி நிலக்கீழ் நீர் வளையங்களுடன் தொடர்பை ஏற்ப்படுத்தி அநியாயமாக

ஓடும் நீரை இவற்றினூடாக நிலத்துக்கு கீழ் அனுப்ப வேண்டிய பொறுப்பு எம்முடையதாகும்.

மழை நீரை எப்படி சேமிப்பது அல்லது நிலத்துக்கு கீழ் விரைவாகவும் மழைநீர் விரையமாகாமல் நிலத்துக்கீழ் அனுப்பவதே மிகமிக அவசியமான பணி என்பதை இங்கு வலியுறுத்திக்கொள்ள விரும்புகிறோம்.

இந்த அறிக்கையை வாசிப்பவர்கள் இதர காரைநகர் மக்களுடன் இவை பற்றி கலந்து பேசுவது ஆலே-ாசிப்பது அவசியமாகும்.
வயல்கள் மற்றும் வெள்ளம் தேங்கி நிற்க்கும் இடங்களில் 60 சதவிகித வெள்ளம்(மழைநீர்) மீண்டும் வெப்பம் காரணமாக ஆவியாகிபோய் விடுகின்றது. அவை பரந்த இடங்களில் தங்க வைக்கப்படுவதே முக்கிய காரணமாகும். குளங்களின் ஆழம் மேலும் ஆழமாக்கப்படல் வேண்டும். அதே போல் எல்லா குளங்களின் அருகேயும் மிகவும் ஆழமாக தோண்டப்பட்டு நிலத்துக்கு கீழ் மழைநீரை அனுப்புவதற்கான வசதிகளும் செய்யப்படல் வேண்டும்.

இந்த இடத்தில் யாழ் சுண்ணாகத்தில் மின்சாரம் பெறபாவிக்கப்பட்ட இயந்திரங்களின் கழிவுகளை நிலத்துக்கு கீழ் அனுப்பப்பட்டதாகவும் அப்பிரதேசத்தின் கிணறுகள் இன்றும் நீரின் மேல் எண்ணைப்படலம் இருப்பதை பலபடங்கள் வீடியோக்கள் கிடைக்கப்பட்டுள்ளதையும் அவதானிக்கவும். மேலும் இவைபற்றிய ஆய்வுகளில் எமது காரைநகர் மக்களின் உறுப்பினர்கள் கொண்டகுழு(Enviormental Scientist) ஒன்று நிரந்தரமாக இயங்குவது அவசியமாகும்.

எமது காரைநகர் மக்கள் தெளிவாக ஒன்றை புரிந்து கொள்ள வேண்டியது யாதெனில் இனிமேல் இந்திய பிராந்தியத்தில் மழை மும்மாரியும் பொழியாது. மாரி கோடை என்ற கால நிலைகளும் இருக்கப் போவதில்லை என்பதாகும். இக்கருத்தை அண்மைக்கால காலநிலை மாற்றங்களை வைத்து காரைநகர் மக்கள் புரிந்து கொள்ள முடியும், இதற்கு ஏற்றால் போல நாம் எமது வாழ்வு முறைகளையும் மாற்றியமைத்து எமது வாழும் சுற்றாடலையும் அதற்கு ஏற்ப பாவிக்க வேண்டிய அவசியத்தில் இருக்கின்றோம். அதன் மூலமே சிறப்பான சமூகமாக நாம் வாழ முடியும். இந்த பூமி அதிகமாக வெப்பமடைந்துள்ளதால் கடந்த காலங்களில் இயற்கையாக தரப்பட்ட மழைநீரின் அளவு மிகவும் வேறுபட்ட அளவிலேயே இயற்கையால் வழங்க முடியும். அதாவது ஒரு சில குறிப்பிட்ட நாட்களில் மிக அதிகமான மழை பெய்யலாம் அதே போல இந்த மழை பலதடவைகள் பெய்யக்கூடும். அதே போல பூமியின் சில பகுதிகளுக்கு மழை இல்லாமலும் போகலாம் சில இடங்களில் அளவுக்கு அதிகமாக மழை பெய்து மக்கள் வாழ்விடங்களை மிக நீண்ட காலங்களுக்கு வாழ முடியாத நிலைமைகளையும் உருவாக்கிவிடலாம் எனவும் புவியியல் விஞ்ஞானிகள் கருதுகிறார்கள்.

அண்மைய இலங்கை தமிழின உரிமைப் போராட்டத்தின் பின்னர் பிரதேச சபைகளுக்கு அதிகாரங்களை பகிர்ந்தளித்தல் பற்றி பேசப்படும் இக்காலத்தில் பிரதேச சபைகளை காரைநகர் மக்கள் இணைந்து பலப்படுத்த வேண்டும் மழைநீரில் ஒரு துளியும் வீணாக போகாமல் பாதுகாப்பதே மண் வளத்தையும் நீர் வளத்தையும் செழிப்புற செய்வதற்குரிய மிகவும் முக்கிய செயலாகும்.

இந்த நீர்நில செழிப்பே மக்களை காரைநகரில் நல்வாழ்வுக்கும் வழிதரும். இந்த மழை நீரை நிலத்துக்கு கீழ் நீர்வளையங்களுக்கு அனுப்புவது என்பது உலகில் புதிய நடைமுறையல்ல பல வறண்ட நாடுகளில் கடந்த 10 வருட காலங்களில் நடைமுறைப் படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் என்பதையும் அவற்றினால் அவர்கள் தமது நன்னீர் பிரச்சனைக -ளுக்கு தீர்வு கண்டுள்ளார்கள் என்பதையும் உணர வேண்டும்.

இவை யாவும் மனிதரால் இலகுவாக செய்யப்படக் கூடிய திட்டங்கள் என்பதை புரிந்து கொள்ள வேண்டும். உடனடியாக நாம் இந்த அவசர நடவடிக்கைகளை புரிந்து கொள்ளாது விட்டால் என்றோ ஒரு நாள் நாம் எமது இக்கட்டான வாழ்வுக் காலத்தில் இவற்றை செய்தே வாழ வேண்டியிருக்கும் என்பதை நினைவு படுத்த விடும்புகிறோம். நாம் எமது வாழும் சூழல் பற்றி எமது சமூகம் பலமாக உள்ள போது அக்கறை கொள்வது அவசியம்.
இந்த விடயங்களை காரைநகரில் இருப்பவர்களே அக்கறை எடுத்து செய்ய வேண்டும் புலம் பெயர்ந்த காரைநகர் மக்கள் உதவி செய்ய முடியும்.

மழை வெள்ளத்தை நிலத்துக்கு கீழ் அனுப்புவதே வளம், செல்வம், செழிப்பு, இன வளர்ச்சியாகும். மேற்குறிப்பிட்ட கருத்துக்கள் பற்றிய ஆய்வினையும், செயலாற்று முறைகள் பற்றியும் எமது குழு உங்களுக்கு உதவ முன்வருகின்றது.

1979-81 காலப்பகுதியில் காரைநகர் யாழ்ற்றன் கல்லூரியில் காரைநகரில் இருக்கும் ஆயுள்வேத மருத்துவ மூலிகைகள் பற்றியும் காரைநகர் இந்துக்கல்லூரியில் காரைநகரில் நீர்வளங்கள் பற்றிய ஆய்வுகளும் உயர்தர வகுப்பு மாணவர்களால் செய்யப்பட்டிருந்ததையும் குறிப்பிட விரும்புகின்றேன். அன்றையகாலத்திலும் அதற்க்கு முன்னைய காலத்திலும் காரைநகர் மக்கள் தமது சுற்றாடல் பற்றியும் தமது அவசிய தேவையான நன்நீர் சேகரிப்பு பற்றியும் அக்கறையுடன் இருந்துள்ளனர் என்பதை நினைவுபடுத்துகின்றது.

**காரைநகரின் நன்னீர் பிரச்சினை தொடர்பான காரணிகள் தொடர்பாக சபையோரின் கருத்துக்கள் பெறப்பட்டன**

**பின் வரும் காரணிகள் கண்டறியப்பட்டன:**

1) காரைநகரில் அண்மை காலங்களாக கிணறுகளில் இருந்து நீர் இறைக்கும் இயந்திரப் (water pump) பாவனை அதிகரிப்பும் அதனால் நிலத்துநீர் பாதிப்புகள்
2) நிலக்கீழ் நீர் விரயம் பற்றி பேசப்பட்டது
3) கரைநகரில் பராமரிப்பற்றிருக்கும் கிணறுகளில் நன்னீர் இருப்பதும் சில கிணறுகள் துப்பரவு செய்ப்பட்டு மக்களின் பாவனைக்கு ஏற்றால் போல் திருத்தியமைக்-கப்பட முடியும், அவற்றை திருத்தியமைத்தல் பற்றி பேசப்பட்டது.

4) காரைநகரில் நன்னீர் கிணறுகளுக்கும் மக்களின் பாவனையில் இருக்கும் கிணறுகளுக்கும் அண்மையில் மரங்கள் நாட்டப்படுவதின் அவசியம் பற்றி பேசப்பட்டது. அவை நன்னீரை சேமிக்கும் என்பதுடன் மக்களுக்கு ஆறுதலாகவும் இருக்கும்.

5) மழைநீர் விரையமாக காரைநகர் கடலில் விழுந்து அநியாயமாக போவது பற்றிய கருத்துக்கள் பலராலும் முன் வைக்கப்பட்டது, இந்த நீர் தடுப்புக்கள் பற்றிபேசப்பட்டது.

6) காரைநகரைச் சுற்றி அணை எழுப்புவது பற்றி காரைநகரில் மக்களின் அக்கறை கொண்ட தலைவர்கள் முதியோர்களால் பல தடவைகள் பேசப்பட்டும் அவற்றில் சில பகுதிகளாவது செயல்ப்படுத்தப்பட்டிருப்பதும் அவைமுழுமை பெறவேண்டியதன் அவசியம் பற்றி பேசப்பட்டது.

7) இலங்கை இராணுவத்தினரின் நீர் இறைக்கும் இயந்திரம் ஊடாக கூடியளவு நிலத்தடி நீர் வெளி-யேற்றப்படுவதைபற்றியும் இவர்களையும் மழை நீரை காரைநகரில் சேமிப்பது பற்றி கலந்துரையாடப்பட்டது.

8) காரைநகரில் உள்ள குளங்கள் ஆழப்படுத்தப்படல் வேண்டும். அவற்றை சுற்றியுள்ள அணைகள் உயரத்துவதன் மூலம் அதிகளவிலான நீர் சேகரிக்க முடியும் என்பது பற்றியும்.

9) காரைநகரில் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் நீர் விநியோகதாரர்களிற்கு இடையிலுள்ள வேறுபட்ட சேவைகளும் பிரச்சனைகளும் பற்றியும் அவைவிரைவாக ஆராயப்படவேண்டும் எனவும் கலுந்துரையாடப்பட்டது.

10) அரசாங்கத்திடமிருந்து பல்ஆலோசனைகள் உதவிகள் மக்கள் சரியாக பெறுவதில்லை என்றும் மக்கள் அக்கறையற்று இருப்பது பற்றியும் பேசப்பட்டது.

11) காரைநகர் பிரதேசசபை மற்றும் காரைநகர் மக்களின் பிரதான சேவைகளில் ஈடுபடுவோர் பிற இடங்களிலிருந்து வருகைதருவதும் அவர்களிடம் காரைநகர் அபிவிருத்தி பற்றிய அக்கறைக்குறைவு இருப்பது பற்றியும் இதன் விடயங்கள் பற்றி காரைநகர் பிரதேசசபைகள் மற்றும் அரசியல் தலைவர்களிடம் கலந்து பேசி அவர்களை மக்களுக்கு உதவி செய்ய உற்சாகம் கொடுக்க வேண்டும் எனவும் பேசப்பட்டது.

12) உலகில் எல்லா நாடுகளிலும் நீர்வளத்தை சரியாக பாவிப்பதற்காக சொட்டுநீர் பாசன முறையில் விவசாயம் மற்றும் மரங்களிற்கான நீர்ப்பாவனை முறையை காரைநகரிலும் அறிமுகப்படுத்தப்படல் வேண்டும் எனகருத்து பரிமாறப்பட்டது.

13) காரைநகரில் மக்களுக்காக சுய வேலை வாய்ப்பு திட்டங்கள் பற்றி பேசப்பட்டது இவை பற்றி விபர-மாக இனிவரும் கூட்டங்களில் அல்லது இவற்றிற்கு தனியாக கூட்டம் ஒன்றினை நடாத்த வேண்டும் என்று பேசப்பட்டது.

14) காரைநகரில் குளங்களிற்கு அருகிலுள்ள கிணறுகள் கூட உவர்ப்பு நீராக மாறியமை தொடர்பான ஆய்வுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும் என்ற கருத்து முன்வைக்கப்பட்டது.

15) காரைநகரின் நிலவரைபடங்கள் தொடர்பான சரியான தகவல்கள் திரட்டப்பட்டு காரைநகர் வரைபடங்களை எமது பாவனைக்கு என்றாலும் நாம் தயாரித்துக்கொள்ளலாம் எனவும் கருத்துபரிமாறப்பட்டது.

16) பருவகால மழை வீழ்ச்சியில் பாரிய மாற்றங்கள் ஏற்பட இருக்கும் நிலைமைகள் பற்றி பேசப்பட்டது ஆயினும் அடுத்த 5 வருடங்களுக்கு மழை வீழ்ச்சி போதிய அளவு இருக்கும் என இந்திய ஆய்வு அறிக்கைகள் எனஎதிர்வு கூறப்பட்டது.

### அடுத்த கட்ட நடவடிக்கைகள் :

1) மழைநீர் சேகரிப்புதிட்டம் தொடர்பான திட்ட வரைபு மற்றும் விவரணதொகுப்பு - ரகுபதிராஜா, சோதிலிங்கம், நந்தன்

2) கேள்வி கொத்து தயார்படுத்தி காரைநகர் மக்களிடம் நன்னீர் பிரச்சனை தொடர்பான கருத்துக்கணிப்பு - தேவராணி, நந்தன்

3) நிலநீர் மற்றும் மண் படலங்கள் தொடர்பான ஆர-ாய்ச்சிக்கான திட்டம் அதற்கான செலவுகள் தொடர்பான விபரங்கள் - நந்தன், ரவீந்திரன்

4) 6 கிழமைகளில் காரைநகரில் குறைந்தது 10 வீடுகளில் இத்திட்டத்தை செயல்படுத்தல் - கலந்துகொண்டோர்

5) பிரதேச செயலகத்திடம் இருந்து காரைநகர் நன்னீர் தொடர்பான ஆவணங்களை திரட்டல் - நந்தன்

6) நன்னீர் கிணறுகளின் இருப்பிடங்கள் தொடர்பான தகவல்கள் திரட்டல் மற்றும் அவற்றினை காரைநகர் வரைபடத்தில் பதிவு செய்தல் - சோதிலிங்கம், ரவீந்திரன், நந்தன்

7) காரைநகரில் நன்னீர் கிணற்றில் இருந்து குடிநீர் சுத்திகரிப்பான் (water filter/purifier) முறையில் பயன்படுத்தும் ஒருவர் சம்பந்தமான மேலதிக தகவல்களை பெறல் - விக்னேஸ்வரன், நந்தன்

8) ஆர்வமுள்ள பிறநாடுகளிலுள்ள மேலும் காரைநகர் அன்பர்களை இந்நன்னீர் பிரச்சனை தொடர்பான திட்டத்திற்கு இணைத்தல் - நந்தன், முரளி, ரவீந்திரன், சோதிலிங்கம்.

காரைநகர் மக்களின் வாழ்வு தொடர்பாக எமது ஊர் பற்றி அக்கறையுள்ளவர்களுடன் இணைந்து தொடர்ச்சியான கூட்டங்கள் நடத்துவது எனபலரின் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டது அவற்றிக்கான தலைப்புக்களாக கூட்டத்துக்கு வருகை தந்தவர்கள் காரைநகர் மக்களின் வாழ்வியல் அக்கறை காரணமாக பிரேரித்த தலைப்புக்கள் பின்வருகின்றன.

1) ஆரோக்கியமான வாழ்க்கை (Healthy living)
2) காரைநகர் உள்ளூர் உற்பத்தி ஊக்குவிப்பு திட்டங்கள்
3) சேதன விவசாயம் (Organic farming)
4) பனை ஓலை மற்றும் மாட்டுசாணம் மூலம் உரம் தயாரித்தல்
5)மண்புழு உரம் தயாரிப்பு (vermicompost production)
6)கற்றாழை வளர்ப்பு, சாறு உற்பத்தி (Aloevera growing & juice production)

**மேலும் தொடர்புகளுக்கு:**

ப. சிவானந்தராசா (வேதரடைப்பு), 44-773 712 1187, psrasa_2003@yahoo.com

த. சோதிலிங்கம் (வேதரடைப்பு), 44-784 632 2369, sothi@btinternet.com

ந. ரவீந்திரன் (புதுறோட்), 0044-7956469632 , nadarajah.ravindran@gmail.com

M. பாலமுரளி (வாரிவளைவு), 0044-7931566378 mbalamurali70@yahoo.com

தி. ரகுபதிராஜா (புதுறோட்), 0044-7883374709

**காரைநகர் வைத்தியசாலையில் அமைக்கப்பட்ட பயணிகள் நிழல்குடை 10.03.2019 திறந்து வைக்கப்பட்டது!**

அமரர் சைவமணி வித்துவான் மு.சபாரத்தினம் அவர்கள் நினைவாக அன்னாரது பிள்ளைகளினால் காரைநகர் அபிவிருத்தி சபை உதவியுடன் அமைக்



கப்பட்ட மேற்படி பயணிகள் நிழல்குடை காரைநகர் வைத்திய அதிகாரி Dr.க.இரத்தினசிங்கம் அவர்களினால் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் காரைநகர் பிரதேச சபை தவிசாளர் திரு.வி.கேதீஸ்வரதாசன் உட்பட காரைநகர் பிரதேச சபை உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர். காரைநகர் அபிவிருத்தி சபை தலைவரும் வைத்தியசாலை நலன்புரிச்சங்க தலைவருமான திரு.நா.பாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அமரர் வித்துவான் மு.சபாரத்தினம் அவர்களின் புதல்வரும் கனடா காரை கலாசார மன்றத்தின் முன்னாள் தலைவருமான திரு.ச.பாலச்சந்திரன் அவர்கள் தனது மகளும் சட்டதுறை பட்டதாரியுமான செல்வி தீபா பாலச்சந்திரன் அவர்களுடன் கலந்து கொண்டார்.



## காரை மத்தி ஸ்ரீ சிதம்பரேஸ்வரா சனசமூக நிலையமும் முன்பள்ளியும் இணைந்த கட்டிட திறப்பு விழா 10.04.2019 அன்று நடைபெற்றது

காரை மத்தி சிவகாமி அம்மன் வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ சிதம்பரேஸ்வரா சனசமூக நிலையத்துடன் இணைந்த முன்பள்ளி கட்டிடத்தின் திறப்பு விழா 10.04.2019 அன்று நடைபெற்றது. 60 இலட்சம் ரூபா வரையான நிதியினை வழங்கி திரு.நாகலிங்கம் இந்திரன் அவர்கள் பிரதான அனுசரணையுடன் இத்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.






இலண்டனில் வதியும் திரு.நாகலிங்கம் இந்திரன் அவர்களது முயற்சியினால் காரைநகர் பொன்னம்பலம் வீதியில் “சக்தி இலவச கல்வி நிலையம்” கடந்த பல ஆண்டுகளிற்கு முன்னர் நிறுவப்பட்டு கல்வி மற்றும் சமுதாய பணியாற்றிவருவதும், தொடர்ந்து மேற்படி திட்டம் மற்றும் இலந்தச்சாலையில் அமரர் நாகலிங்கம் சிவகுமார்(சந்திரன்) ஞாபகார்த்தமாக இலந்தச்சாலை சனசமூக நிலையத்திற்கான கட்டிட பணிகள் என்பனவும் நிறைவேற்றப்பட்டுள்ளதுவும் குறிப்பிடத்தக்கன.









**இணையத்தளத்தில் காரைநகர் செய்திகளை பார்வையிட** www.karainews.com



# ஜேர்மனி நாட்டில் காரைநகர் மக்கள் ஊர்ப்பணி ஆற்ற சங்கம் அமைத்து செயற்பட தொடங்கினர்

31.03.2019 அன்று ஜேர்மனி நாட்டில் Durtmund நகரில் அமைந்துள்ள திரு.விஜரத்தினம் அருள் முகன்சாயிபாபா அவர்களிற்கு சொந்தமான உணவக த்தில் “ஜேர்மனி காரை ஒன்றியம்” அங்குரார்ப்பண நிகழ்வு நடைபெற்றது. கடந்த சில வருடங்களாக ஜேர்மனி வாழ் காரை மக்கள் எடுத்துக்கொண்ட முயற்சியின் பயனாக ஜேர்மன் நாட்டில் காரை மக்கள் சார்பாக “ஜேர்மன் காரை ஒன்றியம்” சிறப்பாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்நிகழ்விற்கு பிரான்ஸ் நாட்டில் இருந்து பிரான்ஸ் காரை நலன்புரிச்சங்கத்தின் தலைவரும் அவ்வமைப்பின் ஆரம்ப கர்த்தாவுமாகிய திரு.அ.செல்வச்சந்திரன்(நேரு மாஸ்ரர்) அவர்களும் கனடாவில் இருந்து “எனது ஊர் காரைநகர்” மற்றும் “காரை நியூஸ்.கொம்” இணையத்தள தொகுப்பாளர் திரு.தீசன் திரவியநாதன் அவர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

விழா ஒருங்கிணைப்பாளர் திரு.விஜயரத்தினம் அருள்முகன்சாயிபாபா அவர்களின் ஆரம்ப உரையுட -ன் நேரு மாஸ்ரர் அவர்களின் இறைவணக்கத்துடன் மங்கள விளக்கேற்றல் வைபவத்துடனும் அகவணக் கத்துடனும் விழா மாலை 1.30 மணியளவில் ஆரம்பமாகியது. ஜேர்மன் காரை ஒன்றியத்தின் புதிய நிர்வாக சபையினை தெரிவு செய்ய தற்காலிக விழா தலைவராக திரு.அ.செல்வச்சந்திரன் அவர்கள் நியமிக்கப்பட்டு நிர்வாக சபை தெரிவு இடம் பெற்றது.

ஜேர்மன் காரை ஒன்றியத்தின் முதல் **தலைவராக** திரு.சங்கரப்பிள்ளை ரவீந்திரன் அவர்கள் தெரிவு செய்யப்பட்டார். தொடர்ந்து **செயலாளராக** திரு.நடராசா சண்முகலிங்கம்(அப்பு - கனடா அமிர்தலிங்கம் மாஸ்ரர் அவர்களின் சகோதரர்), அவர்களும் **பொருளாளராக** திரு.வேலுப்பிள்ளை கேதீஸ்வரநாதன் அவர்களும் தெரிவு செய்யப்பட்டனர். தொடர்ந்து முறை -யே மற்றைய நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.



**தலைவர்:**
திரு.சங்கரப்பிள்ளை
ரவீந்திரன்



**செயலாளர்:**
திரு.நடராசா
சண்முகலிங்கம்



**பொருளாளர்:**
திரு.வேலுப்பிள்ளை
கேதீஸ்வரநாதன்

**உபதலைவர்:** திரு.கந்தையா அன்னலிங்கம்
**உபசெயலாளர்:** திரு.விஜரத்தினம் அருள்முகன் சாயிபாபா

**நிர்வாக சபை உறுப்பினர்கள்:**
திரு.ஏகாம்பரம் தவேந்திரன்
திரு.அருளானந்தம் செல்வராசா
திருமதி.விக்கினேஸ்வரி ரவீந்திரன்
Dr. சயந்திகா அருள்முகன்சாய்பாபா



அதனைத் தொடர்ந்து கலந்து கொண்டவர்களின் கருத்துக்கள் அபிப்பிராயங்கள் அறிந்து கொள்ளப்பட்டன. ஜேர்மனியின் பல பகுதிகளிலும் பரந்து பட்டு காரை மக்கள் வாழ்ந்து வருவதாலும் இன்னமும் ஆர்வமும் அதிக ஈடுபாடும் வரும் வரைய- ில் தொடர்ச்சியாக இம்மன்றம் பணிகளை ஆரம்பித்து செயற்படும் போது பலரும் தூர வசதிகளை கருத்தில் கொள்ளாது இணைந்து கொள்வார்கள் எனவும் தொடர்ந்து தானும் நிர்வாகத்தில் இணைந்து கொள்வேன் எனவும் திரு.செல்வநாயகம் பாஸ்கரன் அவர்கள் தெரிவித்தார்.

மற்றைய நாடுகளில் உள்ள காரை அமைப்புக்களின் ஊடாக பலவித கற்றறிவுகளை தாம் கொண்டிருப்பதாக -வும் ஊடகங்கள் ஊடாக எப்பேற்பட்ட செய்திகள் வெளியிடப்படுகின்றன என்பது தொடக்கம் எவ்வாறான நடவடிக்கைகளில் இம்மன்றம் ஈடுபட வேண்டும் என்பது வரையான தகவல்களை தாம் அனுபவத்தின் மூலம் கண்டறிந்துள்ளதாகவும் அதன் மூலம் “ஜேர்மன் காரை ஒன்றியம்” எவ்வித சலசலப்புக்க ளிற் கும் இணையத்தள விமர்சனங்களிற்கும் அப்பாற்பட்டு ஊர்ப்பணி ஆற்றும் எனவும் திரு.விஜயரத்தினம் அருள்முகன்சாயிபாபா அவர்கள் தனது கருத்தில் தெரிவித்ததுடன் அன்பளிப்பாக **200 யூரோக்களை** மன்றத்திற்கு அன்பளிப்பாக வழங்கினார்.

கனடாவில் இருந்து கலந்து கொண்ட திரு.தீசன் திரவியநாதன் அவர்கள் மன்றத்தின் அடிப்படை ஆரம்ப தேவைகளிற்காக **250 யூரோக்களை** வழங்கியதுடன், தனியொருவரினால் ஊரிற்காக ஆற்றப்படும் செயற்பாடுகளில் இருந்து மேலும் பலர் ஒன்றாக இணைந்து செயற்படுவதன் மூலம் சிறுதுளி பெருவெள்ளமாக பலவித செயற்பாடுகளை நிறை வேற்ற முடியும் எனவும், ஐந்தோ பத்தோ அவரவர் தகுதிக்கு ஏற்ற வகையில் நிதியுதவி வழங்கியவர்கள்



அனைவரையும் தெரியப்படுத்தி அவர்களிற்குரிய மதிப்பினையும் மரியாதையினையும் வழங்கி கௌரவிப்பதன் மூலம் மேலும் முன்வந்து ஊரிற்கான செயற்பாடுகளில் இணைந்து கொள்வார்கள் எனவும், அடுத்தவர் முதுகுமேல் சவாரி செய்பவர்கள், பொறாமை நோக்கம் கொண்டவர்கள், வெறும் கருத்துக்களை மட்டும் அள்ளி வழங்கி அடிப்படையில் தம்மால் எவ்விதமான உதவிகளையும் வழங்க முடியாதவர்கள் தம்மை மேதாவிகளாக தம்மை காட்டிக்கொண்டு அடுத்தவர் பெருமைகளை பொறுத்துக்கொள்ள முடியாமல் கருத்துக்களை தெரிவிப்பவர்களை ஓரம்கட்டி நடைமுறையில் இணைந்து செயற்படக்கூடியவர்கள் மற்றும் தமது பங்களிப்பாக ஐந்தோ பத்தோ வழங்கங்கூடியவர்களையும், கருத்தில் கொண்டு மன்றத்தை நடாத்துமாறும் கேட்டுக்கொண்டார்.

பொதுப்பணியில் ஈடுபட்டு பொதுவிடயத்திற்காக நிதி சேகரிப்பில் ஈடுபடுபவர்கள் மற்றும் நிர்வாக சபையில் அங்கம் வகிப்பவர்கள் முதலில் தமது பொக்கற்றுக்குள் இருந்து முதலாவது அன்பளிப்பை வழங்க முன்வரவேண்டும் அவ்வாறு அல்லாதவர்கள் பொதுப்பணிக்கு முன்வரும் இடத்து பொதுப்பணத்தில் கைவைக்கும் நிலமைக்கு தள்ளப்படுகின்றார்கள் என்பதுவும் செயற்பாடற்ற முறையில் பெருமைக் - காகவும் அடுத்தவர் பெருமைகளை தமது பெருமை யாக பேசிக்கொள்வதுமே கருத்தாக கொண்டு செயற்பட்டு வருவதும் வெளிப்படையான கண்டு கொள்ளப்படுகின்ற உண்மை.

ஜேர்மனியில் கடந்த சில வருடங்களாகவே ஜேர்மனி வாழ் காரை மக்கள் ஒரு அமைப்பினை தொடங்கி அதன் மூலம் காரை மண்ணிற்கான பணியினை ஆரம்பிக்க எண்ணியிருந்த போதிலும் தீர்க்க தர- ிசனத்துடனும் முன்னோக்கிய பார்வையுடனும் அமரர் கென்னடி விஜயரத்தினம் அவர்களினால் 2000ம் ஆண்டளவில் எழுதப்பட்ட ஒரு கவிதையில் கென்னடி அவர்களினால் அதற்குரிய வாழ்த்தினை அன்றே தெரிவித்திருந்தமையும் அந்த கவிதை வரிகளும் கூட்டத்தின் போது திரு.அ.செல்வச்சந்திரன் அவர்களினால் குறிப்பிடத்தக்கது.
“உயிர்த்தோர் வாழ்த்து” என்னும் ஒரு கவிதை தொகுதியில் அமரர் கென்னடி வியரத்தினம் அவர்களால் எழுதப்பட்ட கவிதை வரிகளில் ஒரு சில வரிகள் வருமாறு:

திக்கெட்டும் கல்வி தேட்டமாகி தீந்தமிழ் வளர்க்க
தீதெலாம் அழிக்க தீராய்த் திரண்ட திண்ணரே வாழி!
பாரெல்லாம் பரந்தீர் கல்வி கற்றீர்
ஊரெல்லாம் உள்ளம் கொண்டீர்
ஊக்கமாய் உதவி செய்தீர்
தேனருந் தமிழோர் வாழி! திண்ணபும் வாழி!
**அ**கிலமெலாம் காரையூரார் அடம்பனாய் திரண்டு வாழ்க!
**ஆ**ஸ்த்திரேலியக் காரை மன்றத்து ஆன்றோர் வாழ்க!
**இ**னியதோர் **ஜெர்மனியில் இனியென்றும் திரள்வோர் வாழ்க!**
**ஈ**ழத்தின் உதாரணமாய் ஈகையிற் சிறந்திங்குற்றோர்
**உ**யர்புகழ் கனடா கலாச்சார மன்றத்தோர் வாழ்க!
**ஊ**க்கமாய் பிரெஞ்சு நாட்டிலே உள்ளோரும் வாழ்க!
**எ**ழில் மலைச்சாரல் நாடாம் சுவிற்சர்லாந்தில்
**ஏ**ற்றம் கொள் சுவிஸ் காரை சபையோர் வாழ்க!
**ஐ**க்கியராச்சியத்துத் தேம்ஸ் நதி தீரத்திலே
**ஒ**ளி வளர் நலன்புரிச் சங்கத்தோர் வாழ்க!
**ஓ**ங்கி உலகளந்தும் ஊர்க் காரை மக்களுக்கு
**ஔ**டதமும் உயிரெழுத்தும் ஆனோர் வாழ்க வாழ்கவே!

அதனைத்தொடர்ந்து மதிய நேர உணவு திரு.சாய்பாபா அவர்களின் அனுசரணையோடு வழங்கப்பட்டது. மதிய நேர உணவினை திருமதி சாய்பாபா கலிஸ்ரா அவர்கள் தயாரித்து வழங்கியமையும் கலந்து கொண்டோர் மதிய உணவில் திழைத்து நன்றியோடு வீடு எய்தினர்.





## களபூமி கிளுவனையில் மழை நீரை தேக்கி வைக்க குளம் அமைக்கப்படுகின்றது

காரைநகர் சைவ மகா சபையின் நூற்றாண்டு நிறைவின் இன்னொரு செயற்றிட்டமாக களபூமியில் கிளுவனைக் கால்வாய் கரையை அண்டி குளம் அமைக்க மே மாதம் ஆரம்பித்திருக்கின்றது. இதற்கான அனுசரணையை பிரித்தானிய காரை நலன்புரிச் சங்கம் வழங்கி வருகின்றது.
இதன் மூலம் கிளுவனை நன்னீர் வலயம் மேலும் நிலத்தடி நீரால் செழுமை பெறுவதுடன் வீணே கடலிற்கு செல்லும் மேலதிக நீர் தேக்கப்படும் அயல் பிரதேச வயல்கள் செழிப்புறும் .
காரைநகரின் நன்னீர் தேவையின் ஓர் பகுதி பூர்த்தி செய்ய வாய்ப்பு கிடைக்கலாம்.
திரு திருமதி சோமசுந்தரம் அருளாம்பிகை தம்பதியினர் தங்கள் 22 பரப்பு காணியை சகாய அன்பளிப்பை பெற்றுக் கொண்டு வழங்கி உதவியுள்ளனர்.

விரைவான அனுமதி வழிகாட்டல் வழங்கிய கமநல திணைக்களம், காரை கிழக்கு விவசாய சம்மேளனம் ஆகியோருக்கும் அனுசரணை வழங்கும் பிரித்தானியா காரை நலன்புரிச் சங்கத்திற்கும் காரை சைவ மகா சபையின் மனமார்ந்த நன்றிகள்.





## காரைநகரில் அம்மாச்சி உணவகம் திறக்கப்பட்டுள்ளது




காரைநகர் வலந்தலை சந்தியில் அம்மாச்சி உணவகம் 29.04.2019 திங்கட்கிழமை திறந்து வைக்கப்பட்டது. தமிழர் பாரம்பரிய உணவுகளை சுத்தம் சுகாதாரத்துடன் வாடிக்கையாளர் முன்னிலையில் சமைத்து வளங்கும் open kitchen முறையினை நடைமுறையாக கொண்டு விளங்கும் “அம்மாச்சி” உணவகம் காரைநகரில் திறந்து வைக்கப்பட்டுள்ளதானது சுற்றுலா பயணிகளையும் ஊர் மக்களையும் வெகுவாக கவர்ந்துள்ளது.






# வலந்தலை மருதடி வீரகத்தி விநாயகர் ஆலய மூலஸ்தானம் மற்றும் மகா மண்டபத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது



மேற்படி ஆலயத்தில் 2017ம் ஆண்டு முதல் கருங்கல்லிலான இராஜகோபுர திருப்பணியினை இலண்டனில் வதியும் திரு.இராமநாதன் சிவசுப்பிமணியம் அவர்களது அனுசரணையுடன் நடைபெற்று வருகின்றது. அதனைத் தொடர்ந்து வெள்ளைக்கற்களினால் அமையப்பெற்றிருந்த மூலஸ்தானம் மற்றும் மகாமண்டபத்தினை கருங்கற்களினால் அமைப்பதற்காக 10.04.2019 அன்று அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

இத்திருப்பணியினை 'கலைமாடக்கோன்' திரு.சண்முகம் சிவஞானம் அவர்கள் அனுசரணை யுடன் நடைபெற்று வருகின்றது. கருங்கற்களினால் அமையப்பெறவுள்ள மூலஸ்தானம் மற்றும் மகாமண்டபத்திற்கு தேவையான கருங்கற்கள் வந்தடைந்து அதற்கான பொழிவு வேலைகளும் 80 வீதம் வரை பூர்த்தி செய்யப்பட்டுள்ள நிலையில் பாலா-லயம் அமைக்கப்பட்டு 11.02.2019 அன்று பாலஸ்தாபனம் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து பழைய வெள்ளைக்கற்களினாலான கட்டிடம் முழுமை-யாக கழட்டப்பட்டுள்ளதும், திருப்பணி வேலைகள் துரித கதியில் நடைபெற்று வருவதும் அறிந்து கொள்ளத்தக்கது.












எனது ஊர்
காரை நகர்
www.karaiNEWS.com

## கனடா காரை கலாசார மன்றம் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபை தெரிவும்...! 2019-2020



24.03.2019 அன்று ஸ்காபுரோ பெரிய சிவன் ஆலயத்தில் நடைபெற்ற கனடா காரை கலாசார மன்றத்தின் பொதுக்கூட்டத்தின் போது 2019-2020 ஆண்டுகளிற்கான புதிய நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டது. 9 பேர்கள் கொண்ட நிர்வாக சபை கலந்து கொண்ட அங்கத்தவர்களினால் தெரிவு செய்யப்பட்டது.

தலைவராக கனடா காரை கலாசார மன்றத்தில் 2007 -2008 காலப்பகுதியில் அமரர் திரு.அ.கருணாகரன் அவர்கள் தலைமையில் பொருளாளராக கடமையாற் - றியவரும் ஊர்ப்பற்றுடன் தொடர்ந்து செயற்பட்டுவருப - வருமான **திரு.சிவசுப்பிரமணியம் சிவராமலிங்கம் (புதுறோட்)** அவர்களும், செயலாளராக மத்திய கிழக்கிலும் கனடாவிலும் கணக்கியல் துறை யில் பணிபுரிந்தவரான **திரு.ஆறுமுகம் சின்னத்தம்பி (களபூமி)** அவர்களும், பொருளாளராக அமரர் ஆசிரி - யர் தம்பிராசா விஸ்வலிங்கம் அவர்களின் மகளும் கனடாவில் கணக்கியல் துறையில் அங்கீகாரம் பெற்றவரும் தாயக நலனில் சமூக செயற்பாடுகளில் ஈடுபடுபவருமான **திருமதி இந்திரா ஜெயானந்தன் (ஆயிலி)** அவர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அது மட்டுமன்றி நடைபெற்ற பொதுக்கூட்த்தின் போது



தலைவர்
சிவசுப்பிரமணியம்
சிவாமலிங்கம்



செயலாளர்
சின்னத்தம்பி
ஆறுமுகம்



பொருளாளர்
திருமதி இந்திரா
ஜெயானந்தன்

கனடாவில் கணக்கியல் துறையில் (CPA) கனடிய அங்கீகாரம் பெற்ற உறுப்பினர்கள் 8 பேர்கள் கலந்து கொண்டமையும் கனடா காரை கலாசார மன்றத்தின் கடந்த கால நிதி செயற்பாடுகள் உன்னிப்பாக அவதானிக்கப்படுவதையும் ஊர்ஜிதம் செய்துள்ளது.

தற்போது அமைந்துள்ள நிர்வாக சபையிலும் கனடா காரை கலாசார மன்றத்திற்கு புதிய வரவாக திருமதி சிவகுமார் நாகேஸ்வரி (CPA) அவர்களும் நிர்வாக சபை உறுப்பினராகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளார். அத்துடன் உபதலைவராக முன்னாள் தலைவர் திரு.சபாரத்தினம் பாலச்சந்திரன்(கணக்கியல் துறை Revenue Canada), உப பொருளாளராக திரு.சிவசம்பு சிவநாதன் (CPA) மற்றும் போஷகர் திரு.கந்தையா கனகராசா (CPA, ஓய்வுபெற்ற Revenue Canada உத்தியோகத்தர்). இவ்வாறு தற்போது அமைந்துள்ள 9 நிர்வாக உறுப்பினர்களைக் கொண்ட கனடா காரை கலாசார மன்றத்தின் நிர்வாகத்தில் 6 நிர்வாக உறுப்பினர்கள் கனடாவில் கணக்கியல் துறையினை பிரதான துறையாக கொண்டு விளங்குபவர்கள் என்பது அவதானிக்க கூடியது.







# " காரை ஒன்றியம் ஜேர்மனி " உருவாக்கமும் சிந்தனையும்...

உலகம் முழுவதிலும் காரைநகர் மக்கள் பரந்து வாழ்ந்தாலும் ஜேர்மனி நாட்டில் இதுவரை காரை மக்கள் சார்பாக மண்ணின் பெயரால் ஒரு அமைப்பு இல்லாதது ஒரு குறையாக இருந்து வந்துள்ளது. 2016ம் ஆண்டு பிரான்ஸ் காரை நலன்புரிச் சங்கத்தின் ஆண்டு கலை விழாவில் திரு.இளையதம்பி தயானந்தா அவர்கள் ஆற்றிய உரையின் பின்னர் ஜேர்மனி வாழ் காரை மக்கள் "சீரியஸ்" ஆக "திங்" பண்ண தொடங்கினார்கள்.

காரைநகர் மக்களில் அண்ணளவாக 300 குடும்பங்களிற்கு மேலாக ஜேர்மனி நாட்டில் பரந்து வாழ்ந்து வருகின்றார்கள். தற்போது உலகம் முழுவதிலும் உள்ள காரை மண் சார்ந்த அமைப்புக்களில் கருத்து வேறுபாடுகள் நிலவி வந்தாலும் எல்லா அமைப்புக்கள் மூலமும் காரை மண்ணும் காரை மக்களும் குறிப்பிடத்தக்க பயன்களை பெற்று வருகின்றார்கள் என்பது கருத்து வேறுபாடுகளிற்கு அப்பாலும் கண்டுகொள்ளத்தக்கது. அந்த வகையில் தற்போது காரை மண் சார்பாக அமைந்துள்ள அமைப்புக்களின் நிர்வாக சிக்கல்கள் மற்றும் தனிப்பட்ட கருத்து முரண்பாடுகளை கடந்த கால நிகழ்வுகள் மூலம் அவதானித்து வந்துள்ள காரணத்தினாலும் ஜேர்மனியிலும் 300 குடும்பங்களிற்கு மேற்பட்ட காரை மக்கள் வாழ்ந்து வருவதாலும் ஆக்கமும் ஊக்கமும் காரை மண் பற்றும் கொண்டவர்கள்

இதுவரை காலமும் சிந்தித்து ஒரு முடிவிற்கு வந்துள்ளார்கள். எனவே எல்லா வகையிலும் நல்லனவற்றை மட்டும் அறிந்து கொண்டு ஜேர்மனி வாழ் காரை மக்கள் எடுத்துக்கொண்ட இந்த முடிவானது தீரவிசாரித்து அறிந்து எடுத்துக்கொண்ட முடிவானது ஆகும். ஆங்காங்கே ஜேர்மன் நாட்டில் பரந்து வாழும் காரை மக்கள் தங்கள் பிள்ளைகளுடன் இணைந்து ஒன்றுகூடி காரை மண் பற்றிய சிந்தனைகளை அடுத்த சந்ததியினருக்கும் எடுத்துச் செல்லும் இம்முயற்சி அனைத்து வகையிலும் நல்லவகையில் அமைந்து கொள்ளும் என்பதில் அதீத நம்பிக்கை கொள்கின்றது இந்த இணையத்தளம். அத்துடன் இந்த முயற்சியில் ஈடுபட்டுள்ளவர்கள் ஊர்ப்பற்றும் மக்கள் நலன்களில் அக்கறை கொண்டுள்ளவர்கள் என்பதும் வெளிப்படையான உண்மையாகும்.

ஜேர்மனி நாட்டில் வாழும் திரு.விஜயரத்தினம் அருள்முகன்சாயிபாபா அவர்கள் கடந்த காலங்களில் இலண்டன், பிரான்ஸ் நாடுகளில் இயங்கி வரும் காரை அமைப்புக்களுடன் நேரடியான தொடர்புகளை கொண்டிருந்தவர். அதுமட்டுமன்றி அர்ப்பணிப்புடன் வேலைப்பழுவிற்கு மத்தியிலும் நேரடியாக பல நூறு மைல்களை கடந்து பயணம் செய்து தனது அனுசரணையினை வழங்கி வந்துள்ளார். அத்துடன் கடந்த வருடம் பிரான்ஸ் நாட்டில் நடைபெற்ற

"காரை ஸ்வரங்கள்" நிகழ்வில் திரு.சங்கரப்பிள்ளை ரவீந்திரன் அவர்களும் குடும்பத்துடன் கலந்து கொண்டு முன்னேற்பாட்டு செயற்பாடுகளில் ஈடுபட்டதுடன் கடந்த 5 ஆண்டுகளாக இது தொடர்பான கருத்துக்களையும் தகவல்களையும் பெற்று வந்துள்ளனர். எனவே திட்டமிட்ட இந்த செயற்பாடானது எல்லா வகை -யிலும் காரைநகர் மண்ணிற்கும் ஜேர்மனி வாழ் காரை மக்களிற்கும் பயனுள்ள ஒரு செயற்பாடாக அமைந்து கொள்ளும் என்பதில் எவ்விதமான

இரண்டாம் கருத்திற்கும் விமர்சனத்திற்கும் அப்பாற்பட்டது. கடந்த ஜனவரி மாதம் திரு.சாயிபாபா அவர்களின் காரைநகர் பயணத்தின் போது காரைநகரில் காரைநகர் விளையாட்டு கழக அங்கத்தவர்களுடன் நேரடியாக ஒரு சந்திப்பினை ஒழுங்கு செய்திருந்தமையும் அதன் போது உடனிருந்த காரணங்களினால் திரு.சாபிபாபா அவர்களின் ஊர் பற்றிய சிந்தனையும் தெளிவான பார்வையும் விளங்கிக்கொள்ளத்தக்க முறையில் அமைந்திருந்தன.

இடம் பெயர்ந்து வாழும் காரை மக்கள் பலரும் ஊரின் முன்னேற்றத்திற்காக பலவித சிந்தனைகளை பலவிதமான திட்டங்களை மனதிலே கொண்டிருந்தாலும் அதனை நிறைவேற்ற தனிமனிதராக அன்றி ஒரு அமைப்பாக ஒரு குழுவாக செய்வதில் இலகு முறைகள் இருப்பதை நன்கு அறிந்தவர்.

தனியொருவராக பலரும் பலவித உதவிகளை எமது காரை மண்ணிற்காக ஆற்றி வந்தாலும் குழுவாக பலர் ஒன்றுகூடி ஒரு செயற்பாட்டை நிறைவேற்றவதில் உள்ள திடமான நம்பிக்கையும் ஊர்ப்பற்றும் மட்டுமே எமது சமுதாயத்தை முழுமையாக முன்னேற்ற உதவும் என்பதனை தனிமனிதர்களாக முயன்று வந்தவர்களால் மட்டுமே அறிந்து கொள்ள முடியும். "அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு".

காரைநகரில் இன்று பதிவு செய்யப்பட்டுள்ள 12 விளையாட்டு கழகங்களிற்கும் அழைப்பு விடுத்து அவர்களுடன் நடைபெற்ற கலந்துரையாடல் மூலம் திரு.சாயிபாபா அவர்கள் பலவிதமான கருத்துக்களை உள்வாங்கிக்கொண்டார்.



தெரிந்தோ தெரியாமலே இன்று வெளிநாடுகளில் உள்ள காரை அமைப்புக்கள் ஒவ்வொன்றும் காரைநகர் மண்ணிலே நடைபெறும் வளர்ச்சிப் பணியில் ஒவ்வொன்றாக பெருமளவு அக்கறையுடன் தனித்தனியான திட்டங்களுடன் தம்மை இணைந்து கொண்டுள்ளார்கள்.

இலண்டன் காரை நலன்புரிச் சங்கமானது குடிநீர் வளங்கலுடனும், கனடா காரை கலாசார மன்றம் கல்விப்பணியிலும், சுவிஸ் காரை நலன்புரிச் சங்கம் வைத்தியசாலை மற்றும் சுகாதார பணியிலும், பிரான்ஸ் காரை நலன்புரிச்சங்கம் ஆரம்ப முன்பள்ளிகள் முன்னேற்றத்திலும், அவுஸ்திரேலியாக காரை நலன்புரிச் சங்கம் தம்மாலான வகையில் அவ்வப்போது தேவைப்படும் உதவிகளையும் காரைநகர் அபிவிருத்தி சபையின் ஊடாக நிறைவேற்றியும் வந்துள்ளன, வருகின்றன.

அந்த வகையில் ஜேர்மனி வாழ் காரை மக்கள் சார்பாக அமையவுள்ள "ஜேர்மனி காரை ஒன்றியம்" காரை மக்களின் விளையாட்டு துறையில் அதிக அக்கறை செலுத்தி விளையாட்டு துறை அபிவிருத்தி தொடர்பாக ஈடுபடுவதற்குரிய வாய்ப்புக்கள் அமைந்துள்ளதோ என எண்ண தோன்றுகின்றது.

காரைநகர் விளையாட்டு துறையானது கடந்த 30 வருட காலத்தின் பின்னர் தற்போது அதன் அதி உச்ச நிலையினை அடைந்துள்ளது. ஆனாலும் 30 வருட காலத்திற்கு முன்னர் இடம்பெயர்ந்து பல நாடுகளிலும் வாழும் காரை மக்களால் உள்வாங்கிக்கொள்ளப்பட முடியாத ஒரு விடயமாக இருப்பது, காரைநகரிற்குள்ளே இன்று 12 விளையாட்டு கழகங்கள் இன்று உருவாகி

இருப்பதும், வெளியிடங்களிற்கு விளையாட செல்லும் போது ஒவ்வொரு கழகங்களும் தனிப்பட்ட கழகங்கள் ஊடாகவே விளையாட செல்வதும், அதனால் பல போட்டிகளில் வெற்றிபெற முடியாத நிலையில் பங்களிப்பிற்காக மட்டுமே சென்று வருவதாகவும் அதன் மூலம் காரை மண்ணிற்கு பெருமை சேர்வதில்லையென்ற ஒரு பெரும் குறை உருவா-கியுள்ளது. அத்துடன் காரைநகரில் இன்று உருவாகியுள்ள 12 விளையாட்டு கழகங்களிற்கும் இடையேயான போட்டி வலுப்பெற்றுள்ள நிலையில் இந்த கழகங்களை வழிநடாத்த ஒரு அமைப்பு இல்லாத பட்சத்தில் இக்கழகங்களிற்கு இடையேயான போட்டியானது காரைநகரில் தற்போது இக்கழகங்களில் அங்கத்தவர்களாக உள்ள பலரிடம் வேற்றுமைகளை விதைத்து விடும் என்கின்ற நிலமையில் கடந்த ஆண்டு காரைநகரில் நடைபெற்ற சில சம்பவங்கள் எடுத்துக்காட்டி நிற்கின்றன. அதன் காரணமாகவும் ஒவ்வொரு விளையாட்டுக்கழகங்களிலும் ஒவ்வொரு விளையாட்டுக்களிலும் திறமையும் பலமும் வாய்ந்த விளையாட்டு வீரர்கள் இருந்தும் விளையாட்டுக் கழகங்களிற்கு இடையே ஒரு புரிந்துணர்வு அற்ற நிலையில் வெளியிடங்களிற்கு சென்று மண்ணின் பெயரால் ஒரு அணி அமைத்துக்கொள்ள அனைத்து விளையாட்டுக்கழகங்களிலும் உள்ள திறன் வாய்ந்த விளையாட்டு வீரர்களை கொண்ட ஒரு அணியினை அமைத்துக் கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுவிடுமோ என்கின்ற அச்சம் ஏற்பட்டுள்ளது.

அதனை போக்கிக்கொள்ள கடந்த (2019)ஜனவரியில் விளையாட்டுக்கழக உறுப்பினர்களுடன் ஒரு கலந்துரையாடலை ஒழுங்கு செய்திருந்தார்

திரு.சாயிபாபா அவர்கள். ஏழு விளையாட்டுக்கழகங் களை சேர்ந்த அந்த விளையாட்டுக்கழக பொறுப்பாளர்கள் கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை ஏற்றுக்கொண்டார்கள். அதன் பிரகாரம் காரைநகர் விளையாட்டுக் கழகங்கள் அனைத்தையும் உள்ளடக்கியதாக காரை மண் சார்பாக ஒரு அமைப்பு ஏற்படுத்தப்பட வேண்டும். அந்த அமைப்பில் அனைத்து விளையாட்டுக் கழகங்களும் பங்குபற்ற வேண்டும். விளையாட்டு கழகங் - களிற்கு இடையே போட்டி மட்டும் இருக்க வேண்டும், தனிப்பட்ட கோபதாபங்கள் அற்ற நிலையில் விளையாட்டு வீரர்கள் நடந்து கொள்ள அனைத்து விளையாட்டுக் கழகங்களும் மாதந்தோறும் இன்னொரு விளையாட்டுக் கழகத்தின ருடன் நட்பு ரீதியான போட்டிகளை நடாத்த வேண்டும். ஒவ்வொரு விளையாட்டுக் கழகங்களில் இருந்தும் சிறந்த விளையாட்டு வீரர்களை இனம் கண்டு வெளியிடங்களிற்கு விளையாட செல்லும் போது காரை மண்ணின் சார்பாக அனைத்து கழக அங்கத்தவர்களும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்

என்கின்ற தீர்மானங்களை முன்வைத்து கலந்துரை - யாடல் நடைபெற்றது. இச்சந்திப்பின் போது காரைநகர் அபிவிருத்தி சபை தலைவர் திரு.பாலச்சந்திரன் நாகலிங்கம் அவர்களும் அழைக்கப்பட்டிருந்தார்.அதற்கு முதற்கட்டமாக காரை- நகர் பிரதேச செயலகத்தில் அனைத்து விளையாட்டு கழகங்களின் ஒன்றியமாக ஒரு அமைப்பினை பதிவு செய்து அந்த அமைப்பின் ஊடாக அனைத்து விளையாட்டுக் கழகங்களிற்கும் கிடைக்கும் வகையில் வெளிநாடுகளில் இருந்து கிடைக்கப்பெறும் உதவிகள் பரந்துபட்டு வழங்கப்பட வேண்டும் என்பதுடன், எந்தவொரு விளையாட்டு கழகமும் தனித்து ஒதுக்கப்பட்டோ அன்றி உதவிகளை பெறமு- டியாதளவில் பரிதாபகரமான நிலையில் பின்தள்ளப்படவோ கூடாது என்கின்ற சிந்தனையினையும் கலந்து கொண்ட விளையாட்டு கழக உறுப்பினர்கள் ஏற்றுக்கொண்டார்கள்.

அந்த வகையில் " எனது ஊர் காரைநகர் " இந்த இணையத்தளத்தின் சார்பாகவும் அனுசரணை வழங்கப்படும் எனவும் விளையாட்டு கழகங்களின் ஒன்றியம் என ஒரு அமைப்பு அமைந்து கொண்டால் நிர்வாக ரீதியாக செயற்படுத்த தேவையான நிதியினை ஒரு வருட காலத்தினுள் வெளிநாடுகளில் வாழும் நல்லுள்ளங்களிடம் இருந்து முதற்கண் 10 இலட்சம் ரூபாய்களை அந்த ஒருங்கிணைக்கப்பட்ட அமைப்பின் பெயரில் அந்த அமைப்பிற்கு வழங்க முன்வருவ தாகவும் வாக்குறுதி அளிக்கப்பட்டது. திரு.சாயிபாபா அவர்களது இந்த விளையாட்டுக் கழகங்களு க்கிடையேயான சந்திப்பும் கலந்துரையாடலும் விளையாட்டுக்கழக உறுப்பினர்களிடையே நம்பிக்கையினையும் வெளிநாடுகளில் வாழும் காரை மக்கள் என்றும் எப்போதும் விளையாட்டு துறை சார்பாக தமது பார்வையினை எப்போதும் கொண்டிருக்கின்றார்கள் என்ற திடமான நம்பிக்கையினையும் காரைநகர் விளையாட்டு வீரர்களிடம் ஏற்படுத்தியுள்ளது.

அதனை செயற்படுத்த வெளிநாடுகளில் உள்ள காரை அமைப்புக்கள் முன்வரவேண்டும். முன்வருவார்கள். காரைநகர் மக்கள் எல்லா வகையிலும் எல்லா துறைகளிலும் ஒருசேர்ந்து முன்னேற இடம்பெயர்ந்த காரை மக்களும் அதற்கு உறுதுணையாக விளங்குவார்கள் என்ற நம்பிக்கையுடன் அனைத்து துறை வல்லுனர்களும் காரைநகரில் ஆவலுடன் காத்திருக்கின்றனர்.



காரைநகர் செய்திகள் உடனுக்குடன்
தினமும் பார்த்து அறிந்து கொள்ள

**www.karainews.com**

இணையத்தளத்திற்கு வருகை தாருங்கள்.
செய்திகள், செய்திகளிற்கு அப்பால்
உள்ள உண்மைகள் விபரமாகவும்
விளக்கமாகவும் எடுத்து வருவதில் 'எனது
ஊர் காரைநகர்'' எப்போதும்
முன்னணியில்....!



**சிறுகதை:**
முருகேசு ரவீந்திரன்

# நல்ல நாள்

'எங்களுக்கு வீடு தேவை' என வீட்டுக்கார அன்ரி சொன்னதைக் கேட்டதும் ரஞ்சனுக்கு அதிர்ச்சியாக இருந்தது. இந்த வீட்டில் குடியேறி ஆறுமாத காலமாகுது. அதற்குள் வெளியேறச் சொன்னால் என்ன செய்யிறது. பூனை குட்டிகளைக் காவிக்கொண்டு திரியிற மாதிரி எங்கட வாழ்க்கையும் அமைஞ்சிட்டுது.

'பிரான்சில இநருந்து மகளும் மருமகனும் வருகினம் அதுகள் இளசுகள், எங்களோட ஒண்டுமண்டா இருக்கேலுமே'. வீட்டுக்கார அன்ரி தன்ர மகளும் மருமகனும் சுதந்திரமா இருக்க வேணும் என நினைக்கிறா. இங்க சுதந்திரம் இல்லை என்று தானே அவை வெளிநாட்டுக்கு ஓடினவை. எல்லாரும் பயந்தே ஓடினவை..? அந்தச் சாட்டில காசுழைக்கப் போனவை தான் அதிகம்.

எங்கட ஆட்கள் எதுக்கும் ஒரு காரணம் கண்டு பிடிக்கிறதிலை கெட்டிக்காரர். முந்திச் சண்டை என்று வெளிநாடுகளுக்குப் போச்சினம். இப்ப சண்டையில்லை இனித்திரும்பி வரலாந்தானே. இப்படி இவன் நினைத்தான்.

வீட்டை விட்டு எழும்பச் சொல்லிப் போட்டினம். இப்ப வீடு பார்க்க வேணும். அது அவ்வளவு இலேசான காரியமாய் ரஞ்சனுக்குத் தெரியேல்லை. இப்ப தீவுப் பகுதி, தென்மராட்சி, வடமராட்சி, வலிகாமம் என்று எல்லா இடத்து ஆட்களும் யாழ்ப்பாணத்தை அண்டித் தான் குடியிருக்க விரும்பினம். தங்கட பிள்ளையளை பிரபலமான பாடசாலைகளில் சேர்க்க வேணும். அதுக்கு யாழ்ப்பாண நகரத்தில் இருக்கிறது தான் நல்லது. எல்லாரும் நகருக்கு அருகில் இருக்க விரும்பிறதால வீடுகளின்ர வாடகையும் கூடிப்போச்சு.

வெளிநாடுகளில் இருக்கிறவைக்கு இஞ்ச மண்வேணுமாம். அதால வீடுகளை அதிக விலை குடுத்து வாங்கியினம். உவையள் சும்மா கிடந்த வீடுவளவுகளின்ர விலையளைக் கூட்டினதால யாழ்ப்பாணத்தில இருக்கிறவைக்கு வாங்க முடியாமல் போச்சுது. உந்த வெளிநாட்டுக்காரரின்ர காசாலதான் கொழும்பிலையும் வீட்டு வாடகை கூடினதாம். வெள்ளவத்தையில இருக்கிற பல சொகுசு மாடிகள் வெளிநாடுகளில இருக்கிறவை அனுப்பிற காசில தான் வாங்கப்படுதாம்.

இப்ப யாழ்ப்பாணத்திலையும் வீடுகளை வாங்கிப் போட்டு வாடகைக்கு விட்டு உழைக்கினம். தெற்கில இருந்து வாற சிங்களச் சனத்துக்கு நாள் வாடகைக்கும் விடுகினம். இதால கூடக்காசு கிடைக்குதாம். உதுக்கென்று 'புரோக்கர் மாரும்' இருக்கினம். அவை ஆட்களை கொண்டு வந்து தருவினம். பிள்ளையளை வெளிநாடுகளுக்கு அனுப்பிப்போட்டு இஞ்ச இருக்கிறவைக்கு, இது இப்ப நல்ல உழைப்பாயும் பொழுது போக்காயும் இருக்கு.

முந்திப்பிரச்சினை காலத்தில வீடுகளை நல்ல மலிவா வாங்கக் கூடியதாக இருந்தது. அரிசி பருப்பு எல்லாம் அதிகவிலை விற்கேக்க அன்றாடச் சீவியத்தைக் கொண்டு

**காரைநகர் மாப்பாணவூரியை பிறப்பிடமாக கொண்ட முருகேசு ரவீந்திரன் அவர்கள் இலங்கை வானொலியில் சிறந்த ஒலிபரப்பாளர், அறிவிப்பாளர், செய்தி வாசிப்பாளர் அத்துடன் இலங்கையில் சிறுகதை எழுத்தாளர்களுள் குறிப்பிடத்தக்க ஒருவர்.**
**2014 இல் வெளியான 'நிலவு நீரிலும் தெரியும்' சிறுகதை தொகுப்பு நூலில் இருந்து இக்கதை எடுத்து வரப்படுகின்றது.**

நடத்துறதே கஷ்டமாய் இருந்தது. அப்ப வீடு வாங்கிறதைப் பற்றி நினைச்சுப் பார்க்க முடியுமே. வெளிநாடுகளில் வாழுறவையும் அவையின்ர தயவில இங்க இருக்கிறவையும் வீடுகளா வாங்கிச் சேர்த்துப்போட்டினம். தவிச்ச முயல் அடிக்கிறது என்று சொல்லுவினம் அது உவையவையளுக்கு நல்லாப் பொருந்தும்.

'வீடு ஏதாவது கிடைச்சுதே' மனைவி சுகிர்தாவின் வினாவால் இவன் சிந்தனை கலைந்தது.
'இன்னும் ஒன்றும் கிடைக்கேல்லை'
'ஆரும் புரோக்கர் மாரிட்ட சொல்லுங்கோ'
'அவங்கள் காட்டுற வீடுகள் எங்களுக்குத் தோதா இல்லை'
'அப்ப என்ன செய்யப்போறியள்'
'இனி அச்சுவேலி, ஆவரங்கால் பக்கந்தான் வீடு பார்க்க வேணும்'
'அங்கயிருந்து பிள்ளையள் பாடசாலைக்கு வந்து போகேலுமே'
'அது தான் நானும் யோசிக்கிறன்' இப்படி ரஞ்சன் கூறினான்.

பிள்ளையள் நகரத்தில உள்ள பாடசாலையில படிக்கினம். மூத்தவன் ஐந்தாம் வகுப்பு. இளையவன் இரண்டாம் வகுப்பு. பாடசாலை வானிலதான் போய் வருகினம். அச்சுவேலியில இருந்து வானில அனுப்பிறதென்றால் என்ர சம்பளமே போதாமல் போயிடும் என இவன் எண்ணினான்.

திருநெல்வேலி கிழக்க கேணியடியில் இரண்டு பரப்புக் காணி இருக்கு. சுகிர்தாவுக்கு சீதமாய் குடுத்தது. அதில வீட்டைக் கட்ட வேணும் என்பது தான் ரஞ்சனதும் மனைவியினதும் நீண்டகால ஆசை, கனவு என்று கூடச் சொல்லலாம். 'சுகியம்' என வீட்டுக்குப் பெயர் கூட வைத்து விட்டான். எல்லாம் கனவு போல் போய்விடுமோ, அப்படி ஆகிவிடக் கூடாது எனக் கடவுளை வேண்டினான்.

குலசேகரம் அண்ணையிட்டக் குடுத்து 'பிளான்' கீறிப் போட்டான். ரஞ்சனுக்கு நிலையம் பார்த்து வீடு கட்டிறதிலை நம்பிக்கையில்லை. இப்ப பெரிய பணக்காரர் எல்லாம் வாஸ்த்து சாஸ்திரம் பாக்கினம். இவை ஏமாத்தி உழைச்சதை வாஸ்த்து சாஸ்த்திரம் என்ற பெயரில் இன்னொருத்தன் ஏமாத்துறான். தங்களிட்ட வேலைசெய்யிற தொழிலாளருக்கு ஐந்நூறோ ஆயிரமோ கூட்டிக் குடுக்க விரும்பாதவை சாத்திரக்காரனுக்கு ஆயிரங்களா அள்ளிக் குடுக்கினம். உழைச்ச காசு ஏதோ ஒரு வழியில செலவழியத்தானே வேணும் என எண்ணினான்.

எங்கட ஆட்கள் இப்பவும் சாத்திரம் பார்த்துத்தான் வீடு கட்டியினம். வாசல் வடக்கையோ தெற்கையோ என்றதை சாத்திரிமார் தான் தீர்மானிக்கினம். ஆனால் கொழும்பு போனால் உதுகள் பாக்கிறேல்லை. அடுக்குமாடி வீடுகள் வாங்கேக்க சாத்திரம் பார்க்கத் தேவையில்லையாம். தங்களுக்கேற்றவாறு காரணங்களைக் கண்டுபிடிக்கிறதில எங்கடயாட்கள் கெட்டிக்காரர் என்பது இவன் எண்ணம்.

முந்தி யாழ்ப்பாணத்தில சாத்திரம் பார்த்துக் கட்டின வீடுகள் பல, விமானக் குண்டு வீச்சிலையும் ஷெல்லடியிலையும் அழிஞ்சு போச்சு, பாதிக்கப்படாத வீடுகள் பலதையும் ரஞ்சனைப் போன்ற இளிச்சவாயன்களுக்கு வாடகைக்கு குடுத்துப்போட்டு அவை வெளிநாடுகளிலையும் கொழுப்பிலையும் வாழுகினம்.

அரசடி வீதியில இருக்கிற இந்த வீட்டுக்கு எட்டாயிரம் ரூபா வாடகையும் இரண்டு வருச முற்பணமும் குடுத்தம். இப்ப எட்டு மாதம் முடியிறதுக்கு முந்தியே எழும்பச் சொல்லியினமே எனக் கவலைப்பட்டான்.

புரோக்கர்மார் எத்தனையோ வீடுகளைக் கொண்டு போய்க் காட்டிச்சினம். ஒன்றும் ஒத்துவாறதாத் தெரியேல்லை. கொழும்பை மாதிரி இப்ப இஞ்சையும் வீடுகளை புறாக்கூடுகளாய் பிரிச்சுக்கட்டி வைச்சிருக்கினம். அப்படியான வீடுகளின்ர வாடகையை குறைச்சுக் குடுத்தாலும் பரவாயில்லை. அவை சொல்லுற வாடகையை குடுக்க உள்ளூரில உழைச்சு சீவிக்கிறவையாலை முடியாது என்பது ரஞ்சனுக்கு தெரியும்.

முந்திப் பிரச்சினை காலத்தில எத்தனையோ வீடுகளில்



**சிறுகதை: நல்ல நாள்**
**முருகேசு ரவீந்திரன்**

ஆட்களை வாடகையில்லாமல் சும்மாயிருக்கச் சொல்லிச்சினம். ஆட்கள் இல்லாத வீடுகளை ஆமிக்காரர் எடுத்துப் போடுவினம் என்று பயம். அதனால சும்மா என்றாலும் இருக்கச் சொல்லிச்சினம்.

பலாலி வீதிக்கு அருகில் தான் ஆட்களில்லாத வீடுகள் அதிகம். ஆனால் இப்படியான வீடுகளில் ஆரும் குடியேற விரும்புறேல்லை. சிலர் சொந்த வீடுகளை விட்டுப் போனால் வீடுகள் அழிஞ்சு போகும் என்று அங்கேயே இருந்தும் இருக்கினம்.

கொழும்பில இருக்கிற சுந்தரம் மாமா இவனுக்கு அடிக்கடி கடிதம் எழுவார். அவரின்ர வீடு கந்தர்மடம் சந்திக்குக் கிட்டவா பலாலி வீதியில் இருக்கு. நல்ல சோக்கான வீடுதான், ஆனால் இடந்தான் சரியில்லை.

பலாலி வீதியால் இராணுவத் தொடரணி போகேக்க விசில் ஊதிப் போக்குவரத்தை தடைசெய்து போடு-வாங்கள். நினைச்சவுடன எங்கேயும் வெளிக்கிடேலாது.

இப்படியான இடத்தில இருக்க ஆரும் விருப்பப்படுவினமே. சுந்தரம் மாமா எவ்வளவோ வலியுறுத்தியும் ரஞ்சன் அவரின் வீட்டை போய் இருக்கேல்லை. இவன் விரும்பினாலும் சுகிர்தாவும் பிள்ளைகளும் உடன்படேல்லை. இவன் குடும்பத்தோடு அன்னசத்திர ஒழுங்கையில் வாடகை வீட்டில் குடியிருந்தான்.

யுத்தம் முடிஞ்ச பிறகு சுந்தரம் மாமா கந்தர்மடம் சந்திக்கு அருகில் இருந்த வீட்டை பதினையாயிரம் ரூபாவிற்கு வாடகைக்குக் குடுத்திட்டார். இப்ப அதில ஏதோ தனியார் நிறுவனம் இயங்குதாம்.

யுத்த காலத்தில அடிக்கடி கடிதம் எழுதின சுந்தரம் மாமா, வீட்டை வாடகைக்கு குடுக்கப் போறதையோ குடுத்ததையோ பற்றி ரஞ்சனோட எதுவும் கதைக்கேல்லை.

இவன் கலியாணம் முடிச்ச பிறகு எத்தனையோ வீடுகளில வாடகைக்கு இருந்திட்டான். பொற்பதி வீதி, இராமநாதன் வீதி, கல்லூரி வீதி, ஆடியபாதம் வீதி, மருதடி வீதி, அன்னசத்திர ஒழுங்கை, அரசடி வீதி என வாடகைக்கு இருந்த வீடுகளைப் பற்றிச் சொல்லிக் கொண்டு போகலாம்.

முந்தி சும்மா இருக்கச் சொன்ன வீடுகள் சிலதை இப்ப விடுதிகளா மாத்திப் போட்டினம். இன்னும் சிலதை நிறுவனங்களுக்கு நல்ல வாடகைக்கு குடுத்திருக்கினம்.

'என்ன யோசிக்கிறியள்'
'ஒன்றுமில்லை'
'கேணியடியில இருக்கிற வளவில் வீட்டைக் கட்டுவோம்'
இப்படி சுகிர்தா கூறினாள். இவனுக்கும் அந்த யோசனை இல்லாமல் இல்லை. எங்களுக்கென்று ஒரு வீடிருந்தால் இப்படி வீடு தேடி அலைய வேண்டியிருக்காது. வீட்டுக்காரர்கள் போடுற நிபந்தனைகளுக்கு அடங்கி அடிமையாய் இருக்க வேண்டிய தேவையும் இல்லை.

இப்ப யாழ்ப்பாணத்தில மூன்று நாலு மாதங்களில வீடுகளை கட்டிக் குடுக்கினம். ஒப்பந்தகாரர்களுக்கும் நிறைய 'ஓடர்கள்' கிடைக்குது. அதால அவையள் வேலையை இழுத்தடிக்கிறது இல்லை. தென்னிலங்கையில இருந்தும் ஆட்களை கொண்டு வந்து வீடுகளைக் கட்டி முடிக்கினம்.

இவன் அவதானித்ததில முந்தின மாதிரி இஞ்ச கூலியாட்களை பிடிக்கேலாது. இதை முன்னேற்றமாயும் கருதேலாது. வெளிநாட்டுக்காரர் அனுப்பிற 'டொலரில' சும்மாயிருந்து சாப்பிடுற ஆட்களின்ர தொகை கூடிப்போச்சு.
எப்படியாவது வீடுகட்டிற அலுலைத்தொடங்க வேணும். தற்காலிகமாய் இருக்க 'அனெக்ஸ்' ஒன்று போதும். அப்படியொரு வீட்டில இருந்தால்தான் சொந்த வீடு கட்டுற எண்ணமும் வலுப்படும் என இவன் நினைத்தான்.



**சிறுகதை: நல்ல நாள்**
**முருகேசு ரவீந்திரன்**

பிறவுண் வீதியில் மிகுந்த கஷ்டத்தின் பின்னர் அப்படியொரு

வீடு கிடைத்தது. அந்தப் புறாக்கூடு போன்ற வீட்டில் குடியேறிய மறுநாளே ரஞ்சன் வங்கியில் வீட்டுக்கடன் பெறுவது பற்றி விசாரிக்க வெளிக்கிட்டான்.

'இன்றைக்கு வியாழக்கிழமை நல்ல நாளில்லை' இப்படிச் சுகிர்தா கூறினாள்.
'இதுக்கும் நல்ல நாள் பார்க்க வேணுமே'
'பின்னை வீடு கட்டுறதென்றால் சும்மாவே'
'உப்பிடி கனக்க யோசிச்சுத் தான் இன்னும் வீடு கட்டாமல் இருக்கிறம்'
'வாற திங்கட்கிழமை நல்ல நாள் என்று கலண்டரில போட்டிருக்கு. போனியள் என்றால் காரியம் கட்டாயம் நிறைவேறும்'
சுகிர்தா கூறியபடி திங்கட்கிழமை போவதாய் முடிவெடுத்தான்.

புறோக்கர்மாருக்குப் பின்னால் திரிந்தவன் இப்போ வங்கி அதிகாரிகளுக்குப் பின்னால் திரியிறான். வீடு வாடகைக்கு எடுப்பதை விடவும் வங்கியில் வீட்டுக்கடன் பெறுவது ரஞ்சனுக்கு கஷ்டமாகத் தெரிந்தது.

கடன் தொகையைக் கொடுக்க வங்கி அதிகாரிகள் அதிக நிபந்தனைகளை விதித்தனர். அவைகள் இவனால் நிறைவேற்றக் கூடியவைகளாக இருக்கவில்லை. இன்னும் சில வங்கி அதிகாரிகள் ரஞ்சனின் சம்பளப் பட்டியலை வாங்கிப்பார்த்து விட்டு ஏளமமாய் சிரித்தனர். ஆனாலும் இவன் மனந்தளர்ந்து விடவில்லை. நல்ல நாள் பார்த்துத் தொடங்கிய அலுவல் கட்டாயம் நிறைவேறும், நம்பிக்கையோடு ஒவ்வொரு வங்கியாகக் கடன்கேட்டு அலைகிறான்.



**சிறுகதை: நல்ல நாள்**
**முருகேசு ரவீந்திரன்**

---

**"எனது ஊர் காரைநகர்" www.karainews.com**
**சேவையாளர் கௌரவமும் சேவை நலன் பாராட்டும் 2019**

காரை மண்ணின் வளர்ச்சியில் தாயகத்தில் பணி புரிந்தவர்கள் மற்றும் பணி புரிந்து வருபவர்கள் ஏராளம் ஏராளம். அரச உத்தியோகமாக இருந்தாலும், தனியார் உத்தியோகமாக இருந்தாலும், அரசியல் -வாதிகளாக இருந்தாலும், பொதுப்பணியாளர்களாக இருந்தாலும் தமது அன்றாட கடமைக-ளிற்கு மேலாக ஒருபடி மேல் சென்று சுயநலமற்ற வகையில் காரை மண்ணின் வளர்ச்சிக்காக பணிபுரிந்து வருபவர்களை காரைநகரில் வசித்துவரும் தற்போதைய குடிமக்கள் மூலமாக இனம் கண்டு சேவை நலன் பாராட்டி சேவையாளர் கௌரவத்தினையும் வழங்கி வருகின்றது. "எனது ஊர் காரைநகர்" www.karainews.com 2017.12.31 அன்று முதன் முறையாக 20 சேவையா -ளர்களை இனம் கண்டு காரைநகர் அபிவிருத்தி சபையின் ஆதரவுடன் முதற்கட்டமாக கௌரவித்திருந்தது.

2019 இலும் மேற்கொண்டு மேலும் கௌரவத்தினை வழங்கவுள்ளது. இந்த இணையத்தளத்தின் வாசகர்கள் மற்றும் காரை மண்மீது பற்றுள்ளவர்கள் தயவு செய்து தங்களது தெரிவுகளை காரணங்களுடன் அறியத்தாருங்கள். வாழும் போதே வாழ்த்துவோம்.

2019 சேவையாளர் கௌரவமும் மதிப்ளிப்பும் ஈழத்து சிதம்பரம் திருவெம்பாவை உற்சவ காலத்தின் போது **2020.01.05 ஞாயிற்றுக்கிழமை காரைநகரில் நடைபெறும்**. வெளியிடங்களில் இருந்து கடமைக்காக அன்றி காரை மண்ணின் வளர்ச்சிக்கா பாடுபட்ட மற்றும் பாடுபட்டு வரும் நல்லுள்ளங்களை இனம் கண்டு மேலும் காரை மண் வளர வாழ்த்துவோம். தொடர்புகளுக்கு email: theesan@karainews.com

## S.K நாதன் நற்பணி மன்றத்தினால் க.பொ.த. சாதாரண பரீட்சையில் குறிப்பிடத்தக்க சித்தி பெற்ற யாழ்ற்ரன் கல்லூரி மாணவர்களிற்கு பணப்பரிசில் வழங்கப்பட்டது

2018 டிசம்பர் மாதம் நடைபெற்ற சாதாரண தர பரீட்சையில் 6A மற்றும் அதற்கு மேல் பெற்ற மாணவர்வர்களிற்கு நாதன் நற்பணி மன்றத்தினால் பணபரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டது. இதன் போது மாணவர்களின் பெற்றோர்கள் மற்றும் திரு.சுப்பிரமணியம் கதிர்காமநாதன் ஆகியோருடன் காரைநகர் அபிவிருத்தி சபையினரும் கலந்து சிறப்பித்திருந்தனர். யாழ்ற்ரன் கல்லூரியில் இருந்து 8 மாணவர்கள் இச்சித்தியினை பெற்றிருந்தனர்.







## 2018 க.பொ.த.சாதாரண தர பரீட்சையில் களபூமி சுந்தரமூர்த்திநாயனார் வித்தியாசாலை பெற்ற பெறுபேறுகள்

2018 டிசம்பரில் நடைபெற்ற மேற்படி பரீட்சைக்கு களபூமி சுந்தரமூர்த்திநாயனார் வித்தியாசாலையில் இருந்து 14 மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றியிருந்தார்கள். இவர்களில் 7 மாணவர்கள் சித்தியடைந்து உயர்தர வகுப்பிற்கு தகுதி பெற்றுள்ளார்கள். **சிறந்த பெறுபேறுகள் வருமாறு:**

செல்வி சஜிதா சௌந்தராஜன் 3A, 2C, 4S
செல்வன் பிரசாந்தன் பேரின்பநாயகம் 2B, 3C, 4S
செல்வி மகிழ் பத்மராசா 4B, C, 3S
செல்வன் றொபின்ராஜ் உதயகுமார் B, 5C, 2S
செல்வி சபோஜினி பவானந்தன் B, 3C, 3S
செல்வன் மதன் ஞானதயாபரன் 4C, 2S
செல்வன் மோகனப்பிரியன் கிருஸ்ணதான் A, 2C 5S

## காரை இந்துவில் பல்கலைக்கழகங்களிற்கு தெரிவான மாணவர்களிற்கான பராட்டு விழா



காரைநகர் இந்துக் கல்லூரியிலிருந்து 2017, 2018 ஆகிய இரு ஆண்டுகளிலும் பல துறைகளிற்கும் யாழ்ப்பாணம், தென்கிழக்கு, கிழக்கு, கொழும்பு ஆகிய பல்கலைக்கழகங்களிற்கு பத்து மாணவர்கள் தெரிவு-செய்யப்பட்டு சென்றிருந்தனர். அமரர் S.P.S என காரைநகர் மக்களால் நன்கு அறியப்பட்ட பிரபல வர்த்தகரான திரு.S.P. சுப்பிரமணியம் அவர்களின் ஞாபகார்த்த ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழ் அன்னாரது மகனும் பழைய மாணவர் சங்க கனடாக் கிளையின் உறுப்பினருமான திரு.அரிகரன் அவர்களின் முழுமையான அனுசரணையுடன் பல்கலைக்கழகம் சென்ற மாணவர்களைப் பாராட்டிக் கௌரவித்த விழா 08-03-2019 அன்று சிறப்பாக நடைபெற்றது. கல்லூரியின் அதிபர் திருமதி சிவந்தினி வாகீசன் அவர்களின் தலைமையில் நடராசா ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்ற இவ்விழாவின் பிரதம விருந்தினராக யாழ்.சென்ஜோன்ஸ் கல்லூரியின் ஓய்வுநிலை உப அதிபரும், மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேசப் பாடசா -

எனது ஊர் காரை நகர்
www.karaiNEWS.com

லையின் ஆசிரியரும் காரை.இந்துவின் பழைய மாணவனுமாகிய திரு.பொன்னுத்துரை ஶ்ரீரீகரன் அவர்களும், சிறப்பு விருந்தினராக ஓய்வுநிலை அதிபர் பண்டிதர் மு.சு.வேலாயுதபிள்ளை அவர்களும்,



கௌரவ விருந்தினராக பழைய மாணவர் சங்க கனடாக் கிளையின் பொருளாளர் திரு.மா.கனகசபாபதி அவர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

பாராட்டிக் கௌரவிக்கப்பட்ட மாணவர்கள் விபரம்:

1. செல்வி டிலானி கார்த்திகேசு – சப்ரகமுவ பல்கலைக்கழகம் முகாமைத்துவ கற்கைகள், வணிகபீடம்
2. செல்வி யாழினி நடேசு – யாழ். பல்கலைக்கழகம் கலைப்பீடம்
3. செல்வன் மகீபன் பஞ்சராசா – யாழ். பல்கலைக்கழகம். இசைத்துறை
4. செல்வன் வினோதன் கனகலிங்கம் – யாழ். பல்கலைக்கழகம் அரசியல் விஞ்ஞானம்
5. செல்வன் பாலசயந்தன் கோமளேஸ்வரன் – மட்டக்களப்பு பல்கலைக்கழகம், உயிர்முறைமைகள் தொழில்நுட்பம்
6. செல்வி டர்மிதா யோகநாதன் – கொழும்பு பல்கலைக்கழகம் உயிர் முறைமைகள் தொழில்நுட்பம்
7. செல்வன் நாகரஞ்சன் தர்மலிங்கம் – யாழ். பல்கலைக்கழகம் முகாமைத்துவ கற்கைகள், வணிகபீடம்
8. செல்வி சரண்யா பேரின்பநாயகம் – யாழ். பல்கலைக்கழகம் கலைப்பீடம்
9. செல்வி யுசிதா யோகரத்தினம் – மட்டக்களப்பு பல்கலைக்கழகம் கலைப்பீடம்
10. செல்வன் கோகுலன் சிவசக்திவேல் – யாழ். பல்கலைக்கழகம்

**காரை.இந்துவின் சாதனை மாணவர்கள் பழைய மாணவர் சங்க கனடாக் கிளையின் அனுசரணை -யில் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்**

க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சிறப்புப் பெறுபேறு -களைப் பெற்ற பன்னிரண்டு மாணவர்களும், சித்திரப் போட்டியில் வலய மட்டத்தில் முதல் ஐந்து இடங்களை பெற்று வெற்றி பெற்ற ஐந்து மாணவர்களும், மாகாண மட்டத்தில் 3ஆம் இடத்தில் வெற்றிபெற்ற மாணவனும் வேறொரு சித்திரப்போட்டியில் மாகாணமட்டத்தில் முதலிடங்களைப்பெற்று வெற்றி பெற்ற இரு மாணவர்களும், 2017ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சையில் மாகாண மட்டத்தில முன்னிலைப் பெறுபேற்றினைப் பெற்ற கலைப்பிரிவு மாணவியும் 07.02.2019 அன்று நடராசா ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்ற வைபவத்தில் பாராட்டி கௌரவிக்கப்பட்டதுடன் ரொக்கப் பரிசில்களும் வழங்கி ஊக்குவிக்கப்பட்டனர்.

கல்லூரியின் அதிபர் திருமதி சிவந்தினி வாகீசன் தலை -மையில் நடைபெற்ற பாராட்டு வைபவத்தில் கல்லூரியின் பழைய மாணவனும் பழைய மாணவர் சங்க கனடாக் கிளையின் ஊடாக கல்லூரியின் வளர்ச்சிக்கு பெரும் பங்களித்து வருகின்றவரும் Double Seal Insulating Glass Ltd, CLEARREX Windows & Doors Manufacturing Inc. ஆகிய நிறுவனங்களின் அதிபருமான திரு. மகாதேவன் பாலசுப்பிரமணியம் அவர்கள் பிரதம விருந்தினராகவும், கல்லூரியின் ஓய்வு நிலை அதிபரும் தாய்ச் சங்கத்தின் உப தலைவருமாகிய கலாபூசணம் பண்டிதர் மு.சு.வேலாயுதபிள்ளை அவர்கள் சிறப்பு விருந்தினராகவும், பழைய மாணவர் சங்க கனடாக் கிளையின் பொருளாளர் திரு.மா.கனகசபாபதி கௌரவ விருந்தினராகவும் கலந்துகொண்டு வைபவத்தைச் சிறப்பித்திருந்தனர்.



## 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்று காரை இந்துவில் கல்வியைத் தொடரும் மாணவர்களுக்கான உதவித் திட்டம் தொடக்கிவைக்கப்பட்டுள்ளது

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்று காரைநகர் இந்துக் கல்லூரியில் அனுமதியைப்பெற்றுக்கொண்டு தமது கல்வியைத் தொடருகின்ற ஆறு மாணவர்களின் கற்றல் செயற்பாட்டிற்கு திரு.மாணிக்கம் கனகசபாபதி அவர்களும், திருமதி சிவலிங்கம் கனகாம்பிகை அவர்களும் நிதி உதவியளித்து ஊக்குவிக்க முன்வந்து இவர்களுக்கான முதற்கட்ட உதவித்தொகை வழங்கிவைக்கப்பட்டுள்ளது. சென்ற ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்று தற்போது ஆறாம் ஆண்டில் பயின்று வரும் மூன்று மாணவர்களுக்கும் 2017ஆம் ஆண்டு புலமைப் பரி - சில் பரீட்சையில் சித்திபெற்று ஏழாம் ஆண்டில் பயின்றுவருகின்ற இரண்டு மாணவர்களுக்கும் ஆக ஐந்து மாணவர்களுக்கு திரு.மாணிக்கம் கனகசபாபதி தமது மனைவி மனோரஞ்சனாவின் ஞாபகார்த்தமாக உதவியினை வழங்குகின்ற அதேவேளை திருமதி சிவலிங்கம் கனகாம்பிகை தமது கணவரான சிவசம்பு சிவலிங்கம் அவர்களின் ஞாபகார்த்தமாக ஆறாம் வகுப்பில் பயின்றுவரும் ஒரு மாணவிக்கான உதவியினை வழங்குகின்றார். திறமைமிக்க இந்த ஆறு மாணவர்களுக்கான இவ்வுதவி அவர்கள் அனைவரும் க.பொ.த. சாதாரண தர பரீட்சைக்குத் தோற்றும் வரைக்கும் தவணை அடிப்படையில் வழங்கப்படவுள்ளது.

புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்று வசதிபடைத்த பலரும் நகர்ப்புறப் பாடசாலைகளில் அனுமதியைப்பெற்றுக்கொண்டு சென்று விட்ட நிலை - யில் இக்கல்லூரியில இணைந்து கல்வியைத் தொடருகின்ற திறமைமிக்க இம்மாணவர்களை உயர்த்திவிடும் நோக்கில் இவ்வுதவியை வழங்க முன்வந்த திரு.கனகசபாபதி அவர்களையும் திருமதி சிவலிங்கம் கனகாம்பிகை அவர்களையும் பாட- சாலைச் சமூகத்தின் சார்பில் பாராட்டி அவர்கள் இருவருக்கும் நன்றியினை கல்லூரியின் அதிபர் திருமதி சிவந்தினி வாகீசன் தெரிவித்தார்.



## 2018இல் நடந்த கா.பொ.த.சாதாரண தர பரீட்சையில் காரை இந்துவில் சிறந்த பெறுபேறுகளை பெற்றுக்கொண்டவர்கள்

சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக்கொண்ட முதல் பதினைந்து மாணவர்களின் விபரம் :


1. செல்வன் ரமேஸ் சயுவண்ணன் 6A 3C
2. செல்வி தமிழினி பேரின்பராசா 5A 2B 2C
3. செல்வி டர்சிகா மயில்வாகனன் 4A 3C S
4. செல்வன்சிவசுப்பிரமணியம் அறிவரசன் 3A 3B 2C
5. செல்வன் திருச்செல்வம் லுகிர்தன் 3A 3B 2C
6. செல்வன் ஏகாம்பரம் துஸ்யந்தன் 3A 3B C
7. செல்வி நிலா வடிவழகையன் 3A 2B 3C
8. செல்வி பவீனா வன்னியசிங்கம் 3A B 3C S
9. செல்வி புருசோத்தமி சிவனேஸ்வரன் 3A C 3S
10. செல்வி ஜென்சிகா தேவராசா 2A 5B C S
11. செல்வி ஜெசிகானி புஸ்பானந்தராசா 2A B 3C 2S
12. செல்வி கஜானி மகேஸ்வரன் 2A 2B C 4S
13. செல்வி கோபிகா அமிர்தலிங்கம் 2A 2B 3C S
14. செல்வி லக்சிகா சுந்தரலிங்கம் 2A 3C S
15. செல்வி பூர்விகா கனகரத்தினம் 2A 3B 3C


**காரைநகர் செய்திகள் உடனுக்குடன் தினம் தினம் பார்த்து அறிந்து கொள்ள www.karainews.com இணையத்தளத்திற்கு வருகை தாருங்கள். செய்திகள், செய்திகளிற்கு அப்பால் உள்ள உண்மைகள் விபரமாகவும் விளக்கமாகவும் எடுத்து வருவதில் 'எனது ஊர் காரைநகர்" எப்போதும் முன்னணியில்....!**

"எனது ஊர் காரைநகர்"
www.karainews.com



தொகுப்பாளர் தீசன் திரவியநாதன்
331 Trudelle Stree, Unit 34
Toronto, Ont. M1J 3J9 Canada
Email: theesan@karainews.com
**TEL: 416 821 8390**



Sell your home for top dollars
Buy Your Home For Less $$$
•FREE home market evaluation
•Free home staging
•Professional photo & virtual tour
•Just listed & sold flyer distribution
•Social media marketing
•Install sale & directions sings
•Email / e-flyers & weekly advertising
•Weekly open house
#1
RE/MAX
OUTSTANDING AGENT FOR OUTSTANDING RESULTS
RE/MAX
Excel Realty Ltd., Brokerage
independently owned and operated
Bus: 905-475-4750
Fax: 905-475-4770
50 Acadia Ave #120, Markham, ON L3R 0B3
Honest, Knowledgeable & Professional Service
in Your Neighborhoods Full Time Realtor
Raj Nadarajah
Sales Representative
Dir: 416-333-6115
nanohomes@gmail.com

# CLEARREX

WINDOWS & DOORS
MANUFACTURING INC.

***At Clearrex, we serve to homeowners, renovators, builders and dealers.***

***We are located in Burk's Falls and are serving customers throughout Northern Ontario.***



***Contact:***
**Mahadevan Balasubramaniam**

***Cell: 416-716-7052***

***567, HIGH STREET, BURKS'S FALLS, ONTARIO, P0A 1C0, CANADA***

***TEL: 705 382 9090 FAX: 705 382 0990***

***Email: mo@clearrex.com*** ***http://clearrex.com***

# DOUBLE SEAL INSULATING GLASS LTD.

Manufacturing high performance
insulating glass units
for commercial and
residental use.



***Contact:***
**MO BALASUBRAMANIAM**

***3530 Nashua Drive, Mississauga, ON. L4V 1L2***

***TEL: 905-672-3232 FAX: 905-676-9449***

***Email: mo@doubleseal.ca*** ***www.doubleseal.ca***